# மின்னல் தாக்கி விமானம் வெடித்தது

Registered as a Newspaper in Ceylon ✦ ✦ விலை சதம் 10

# ஈழநாடு

EELA NADU

தபால் பெட்டி எண் : 49

மலர் 9
போன் 389

National Tamil Daily

இதழ் 67
தேசிய தினசரி

யாழ்ப்பாணம் பராபவ சித்திரை 6 முஹறம் 8 புதன்கிழமை [19-4-67]

## 60 பேர் மாண்டனர்

டெஹ்ரான், ஏப். 18

60 பிரயாணிகளை ஏற்றிக் கொண்டு டெஹ்ரான் நோக்கி வந்துகொண்டிருந்த ஈரான் நாட்டு விமானமொன்று நடுவழியில் வெடித்துச் சிதறிவிட்டதாக அறிவிக்கப்பட்டது. தலைநகருக்கு தென் மேற்கே இந்த விபத்து நடந்துள்ளது. வானவீதியில் மின்னலினால் தாக்கப்பட்டதால் இந்த விபத்து நேர்ந்ததாகக் கூறப்படுகிறது. குண்டொன்று வெடித்தது போல, வான வீதியில் இந்த பெரிய விமானம் வெடித்துச் சிதறியதாம்.

---

### பட்டருக்கு தட்டுப்பாடு

யாழ்ப்பாணம், புதன

யாழ்ப்பாணத்தில் பட்டருக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. ஒரு சில கடைகளில் மட்டும் ஒருவருக்கு கால் றாத்தல் மட்டும் விற்பனை செய்யப்படுகிறது.

### வல்வைச் சம்பவம்

# விசாரணைக் கமிஷன் வேண்டும்

## பிரதமரிடம் தமிழரசுத் தலைவர்கள் வற்புறுத்து

கொழும்பு, செவ்வாய்

தமிழரசுக்கட்சித் தலைவர்கள் இன்று பிரதமரைச் சந்தித்து வல்வெட்டுத்துறையில் அண்மையில் நடைபெற்ற பொலிஸ்-ராணுவ தாக்குதல் சம்பவங்கள்பற்றி விளக்கிக்கூறினார்கள். அவர்கள் விசாரணைக் கமிஷன் ஒன்றை நிறுவும்படி பிரதமரைக் கேட்டுக்கொண்டனர் என்று அறியப்படுகின்றது.

வல்வெட்டித்துறையில் ராணுவத்தாக்குதல்கள் முற்றுப்பெறவேண்டும் என்று தமிழரசுக்கட்சித் தலைவர்கள் பிரதமரிடம் வற்புறுத்திக் கேட்டுக்கொண்டதாகவும் அங்கு நடை பெற்றுள்ள சம்பவங்கள் குறித்து பூரணமாக விசாரணை செய்வதற்கு விசாரணைக்கமிஷன் நியமிக்க வேண்டும் என்றும் அவர்கள் கேட்டுக்கொண்டிருப்பதாகவும் அறியப்படுகின்றது.

தற்போது நடைபெற்று வரும் மாஜிஸ்திரேட் விசாரணை மட்டும்போதாதென்று அவர்கள் குறிப்பிட்டதாக அறியப்படுகிறது.

மாஜிஸ்திரேட் விசாரணை முடிவுகள் அறிவிக்கப்பட்ட பின்னர் தமிழரசுக்கட்சித் தலைவர்களின் கோரிக்கைகள் பற்றி முடிவுசெய்யலாம் என்று பிரதமர் பதிலளித்ததாகவும் அறியப்படுகின்றது.

## பஸ் விபத்தில் 30 பேர் காயம்

கொழும்பு, செவ்வாய்

கொழும்பிலிருந்து நீர் கொழும்புக்குச் சென்றுகொண்டிருந்த ஒரு பஸ் வண்டியும், நீர்கொழும்புப் பாதையில் கொழும்பை நோக்கிவந்துகொண்டிருந்த இரட்டைத்தட்டு பஸ் ஒன்றும் இன்று அதிகாலை, ''ஆர்மர்'' வீதிச் சந்தியில் மோதிக்கொண்டன. இவ்விபத்தினால் இரட்டைத் தட்டு பஸ்ஸில் பிரயாணம் செய்த முப்பதுபேர் காயமடைந்தனர். செல்லத்துரை என்னு சிறுவன் பலத்த காயங்களுடன் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டான். இரட்டைத் தட்டுபஸ் பலத்த சேதத்துக்குள்ளானது.

## கொடிகாமத்தில் கைகலப்பு: ஒருவர்மாண்டார்; மற்றொருவர்காயம்

சாவகச்சேரி, செவ்.

இரு கோஷ்டியினருக்கிடையில் ஏற்பட்ட சண்டையொன்றில் ஒருவர் மரணமானார். மற்றவர் காயங்களுடன் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார். இச்சம்பவம் நேற்று மாலை கொடிகாமத்தில் நடைபெற்றுள்ளது.

கொடிகாமத்தைச் சேர்ந்த கணபதி நாகமுத்து [40 வயது] என்பவரே கொலையில் இறந்தவராவார். சந்தேக நபரான சண்முகம் வல்லிபுரம் என்பவரைக் கையில் வெட்டுக்காயங்களுடன் சாவகச்சேரிப் பொலிசார்கைது செய்துயாழ். ஆஸ்பத்திரிக்கு அனுப்பிவைத்துள்ளனர். இது சம்பந்தமாக சாவகச்சேரி மாஜிஸ்திரேட் திரு. கே. விக்னராஜா இன்றுகாலை விசாரணை நடாத்தினார்.

## கல்முனை கலகத்தில் மற்றுமொருவர் பலி

### நிலைமை கட்டுக்குள் அடங்கியதாக தகவல்

கல்முனை, செவ்.

கல்முனையில் இருபிரிவினருக்கிடையில் ஏற்பட்ட கைகலப்பில் காயமடைந்தவர்களில் ஒருவர் நேற்றிரவு காலமானார். இவருடன் இக் கைகலப்பில் மாண்டவரின் எண்ணிக்கை இரண்டாக உயர்ந்துள்ளது.

கல்முனையில் அமைதியை பாதுகாக்கவும் சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்டவும் கொழும்பிலிருந்தும் பொலிஸ் கோஷ்டியொன்று கல்முனைக்குவிரைந்து அனுப்பப்பட்டுள்ளது. கொழும்பிலிருந்து அனுப்பப்பட்ட பொலிஸ் கோஷ்டியும் அம்பாறை, மட்டக்களப்பு ஆகிய இடங்களிலிருந்து அனுப்பப்பட்ட பொலிஸ் கோஷ்டியும் அங்கு 24 மணி நேரமும் ரோந்துக் காவலில் ஈடுபட்டுள்ளனர்.

நிலைமையை நேரில் ஆராய்ந்து அமைதியை நிலை நாட்டுவதற்கான நடவடிக்கைகளைக் கவனிப்பதற்காக உதவிப் பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரல் திரு. ஸி. ஏ. டெப் கல்முனைக்கு இன்று காலை வந்து சேர்ந்தார்.

இப்பொழுது நிலைமை கட்டுப்பாட்டுக்குள்இருப்பதாக பொலிஸ் அதிகாரிகள் தெரிவித்தனர். முடிக்குரிய காணியில் குடியேறுவது சம்பந்தமாக சென்ற ஞாயிற்றுக்கிழமை இக் கைகலப்பு ஏற்பட்டதாகத் தெரிகிறது. பலர் கல்முனைப் பொலிசில் தஞ்சம் புகுந்துள்ளனர்.

இரு பிரிவினருக்கிடையிலும் சமாதானத்தை ஏற்படுத்தி அமைதியை நிலைநாட்டுவதில் சமூகத் தலைவர்களும் முயற்சி செய்து வருகின்றனர்.

### மாமூல் நிலை

கொழும்பு, செவ்வாய்

கல்முனையில் மீண்டும் மாமூல்நிலை ஏற்பட்டுவிட்டதாகவும், நேற்றிரவு துண்டிக்கப்பட்டிருந்த டெலிபோன் தொடர்புகள் மீண்டும் சரியாகிவிட்டதாகவும் கொழும்பு மத்திய பொலிஸ் நிலையத்துக்கு கிடைத்துள்ள செய்திகள் கூறுகின்றன.

---

## 4வது நபரும் மரணம்

குரும்பசிட்டி, செவ்.

புத்தாண்டு வாணவெடி விபத்தில் ஏற்கனவே மூவர் மரணமாகியிருந்தனர். விபத்துக்குள்ளான நான்காவது நபர் பாலர் கந்தசாமியும் மரணமாகிவிட்டதாக அறிவிக்கப்பட்டது. மற்றுமொருவர் யாழ். ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்றுவருகின்றனர்.

---

## நிர்வாக அதிகாரிகள் வேலைநிறுத்தம்

கொழும்பு, செவ்.

இறக்குமதி ஏற்றுமதி ஸ்தாபனமான என்டர்ஸன் கம்பெனியின் நிர்வாக அதிகாரிகள் எட்டுப்பேர் வேலை நிறுத்தம் செய்துள்ளனர். ஓர் அதிகாரியின் நடவடிக்கைகளை ஆட்சேபித்தே இவர்கள் வேலைநிறுத்தம் செய்துள்ளனர்.

என்டர்ஸன் கம்பெனியின் முன்னால் இரண்டு பொலிஸ் கான்ஸ்டபிள்கள் காவல்புரிகின்றனர்.

---

## தோடம்பழம் விலை உயர்வு

யாழ்ப்பாணம், புதன்

யாழ்ப்பாணத்தில் திடீரெனத் தோடம்பழத்தின் விலை அதிகரித்துவிட்டதால் நோயாளிகள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

கடந்த வாரம் 25 சதத்திற்கு விற்ற தோடம்பழம் இப்பொழுது 50 சதம் முதல் 60 சதம்வரை அதிகரித்துவிட்டது.

## வடபகுதி அசைஸ் விசாரணை ஆரம்பம்

யாழ்ப்பாணம், புதன்

வடபகுதி அசைஸ் நீதிமன்றத்தின் முதலாவது பருவகால விசாரணை நேற்றுக்காலை 11 மணிக்கு யாழ்ப்பாணம் நகரமண்டபத்தில் நீதியரசர் வி. தென்னக்கோன் முன்னிலையில் ஆரம்பமானது. விசாரணை ஆரம்பமாவதற்குமுன் நீதியரசர் நாகவிகாரைக்குச் சென்று வழிபாடு செய்துவிட்டுத் திரும்பினார்.

சார்ஜன்ட் மேஜர் பக்கிர் தலைமையில்பொலிசாரின்மரியாதை அணிவகுப்பு சிங்களத்தில் நடைபெற்றது. வடபகுதி பிஸ்கால் அதிகாரியான அரசாங்க அதிபர் திரு. வேர்ணன்அபயசேகரா விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படவிருக்கும் வழக்குகளின் தொகுப்புக்களை நீதியரசரிடம் கையளித்தார்.

அசைஸ் விசாரணை ஆரம்ப சமயத்தில், நீதிபதிகளும், மாஜிஸ்திரேட்டுகளும், வழக்கறிஞர்களும், பொலிஸ் அதிகாரிகளும், பெண்கள் உட்பட ஏராளமானோர் கலந்துகொண்டனர்.

மல்லாகம் மாஜிஸ்திரேட் திரு. நித்சிங்கா, சாவகச்சேரி மாஜிஸ்திரேட் திரு. கே. விக்னராஜா, யாழ்ப்பாணம் மாஜிஸ்திரேட் திரு. ஜமீல் உதவி மாவட்ட நீதிபதி திரு நைல்ஸ், அரசாங்க அதிபர் திரு. வேர்ணன் அபயசேகரா ஆகியோர் மேடையில் நீதியரசரின் அருகில் அமர்ந்திருந்தனர்.

12கொலை வழக்குகளும்4 கொலை முயற்சிவழக்குகளும் ஒரு கள்ள நாணயவழக்கும் இம்முறை விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படவிருக்கின்றன எதிரிகளுக்காக அரசாகத்தின் சார்பில் வழக்கறிஞர்கள் நேற்றுக்காலை நியமிக்கப்பட்டனர். முடிக்குரிய தரப்பில் இம்முறை வழக்கறிஞர் திஸாபண்டாரநாயக ஆஜரானார். வடபகுதி அசைஸ் விசாரணை மீண்டும் நாளைகாலை 9.30ம மணிக்கு ஆரம்பமாகும்.

## அரசாங்க செலவில் வழக்கறிஞர் ஏற்பாடு

### முதலில் மறுத்த எதிரிகள் பின்னர் ஒப்புக்கொண்டனர்

யாழ்ப்பாணம், புதன்

அரசாங்க செலவில் எங்களுக்கு அப்புக்காத்து வைக்க வேண்டாம் என நேற்றுக் காலை இரு எதிரிகள் வடபகுதி அசைஸ் விசாரணையின்போது தெரிவித்தனர். அரசாங்க செலவில் வழக்கறிஞர் வைக்க வேண்டிய விபரத்தை முடிக்குரிய வழக்கறிஞர் விளக்கிக் கூறியபின் அரசாங்க செலவில் வழக்கறிஞர் வைக்கச் சம்மதித்தனர்.

மயில்வாகனம் வைத்திலிங்கம், பொன்னையா கார்த்திகேசு ஆகிய எதிரிகளிடம் அரசாங்க செலவில் வழக்கறிஞர் வைக்க வேண்டுமா? என்று கேட்ட போது 'வேண்டாம்' எனக் கூறினார்கள். வழக்கறிஞர்களைத் தாங்கள் ஏற்படுத்தப்போவதாகவும் தெரிவித்தனர்.

வழக்கறிஞர்களை ஏற்படுத்திவிட்டீர்களா? என்று நீதியரசர் கேட்டபோது பிரக்கிராசியாரை ஏற்படுத்திவிட்டதாகவும் அப்புக்காத்துவை இன்னும் ஏற்படுத்தவில்லையென்றும் கூறினர்.

முடி. வழ- விருப்பமென்றால் அரசாங்க செலவில் அப்புக்காத்து வைத்துத்தரலாம். உங்கள் செலவிலும் நீங்கள் அப்புக்காத்துவை

[6-ம் பக்கம் பார்க்க]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணிவாக்கு

நான் அஹிம்சை என்ற சாஸ்திரத்தைத் துருவித் துருவிப்பார்க்கும் ஓர் ஏழை ஆராய்ச்சியாளன். கண்ணுக்குத் தென்படாமல் மறைந்திருக்கும் அதன் ஆழங்கள் என் சக ஊழியர்களைத் தடுமாறச் செய்கின்றன.

—மகாத்மா காந்தி

ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegram: EELANADU Jaffna
Post Box 49 Jaffna
Telephone: 389.

யாழ்ப்பாணம் பிலவங்கஹூ சித்திரை மீ 6உ (19-4-67)

## விஷமப்பிரசாரம்

வடக்கிலும் கிழக்கிலும் இராணுவம், கடற்படை, பொலிஸ்படை ஆகியவைகளின் 'நடத்தை' பற்றி விசாரணை செய்வதற்கு மூவர் 'கமிஷன்' ஒன்றை நியமிக்க அரசாங்கம் தீர்மானித்திருப்பதாகவும் விரைவில் இது பற்றிய அறிவித்தல் வெளிவரலாமென்றும் ஒரு செய்தி கூறுகிறது. இது பெரிதும் ஆறுதலளிப்பதாகும்.

சமீபத்தில் வல்வெட்டித்துறையில் நடந்த துரதிர்ஷ்டமான சம்பவங்களைத் தொடர்ந்து வல்வெட்டித்துறைச் சம்பவம் மட்டுமின்றி வடக்கு, கிழக்கு மாகாணங்களில் சென்ற சில வருடங்களாக இராணுவத்தினரும் பொலிசாரும் 'நடந்து வரும்' முறைபற்றி விசாரணை செய்ய ஒரு கமிஷன் நியமிக்கவேண்டுமென்று மக்கள் பிரதிநிதிகள் பிரதமரைச் சந்தித்துக் கேட்டிருந்தனர். பொது மக்கள் பலரும் பொதுஸ்தாபனங்களும் கூட விசாரணைக் கமிஷன் நியமிக்கும்படி கோரியிருந்தனர். வல்வெட்டித்துறைச் சம்பவங்கள் பற்றி இதே பத்தியில் நாமும் கருத்துத் தெரிவித்தபோது பாரபட்சமற்ற விசாரணைக் கமிஷன் ஒன்று நியமிக்க வேண்டுமெனக் கேட்டிருந்தோம். வல்வெட்டித்துறையில் மட்டுமல்ல, இயக்கச்சி, மன்னார், முல்லைத்தீவு ஆகிய பல இடங்களிலும் இராணுவத்தையும் பொலிசையும் சேர்ந்த சிலர் 'அத்து மீறிய' செயல்களில் ஈடுபட்டதாகப் புகார் வெளிவந்த பல தடவைகளிலும் அவைகளுக்கு நாம் கண்டனம் தெரிவித்ததுடன் இச்செயல்கள் பற்றிப் பாரபட்சமற்ற முறையில் விசாரணை செய்து, தவறு செய்தவர்கள் மீது 'தகுந்த' நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும் பொது மக்களின் அச்சத்தையும் பீதியையும் நீக்கி அவர்களுக்குப் பாதுகாப்பளிக்க வேண்டுமென்றும் குறிப்பிட்டிருக்கிறோம்.

இராணுவம், கடற்படை, பொலிஸ் படை ஆகியவைகளின் நடத்தை குறித்து விசாரணை செய்ய அரசாங்கம் முன்வந்திருப்பது வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்குமட்டுமல்லாது இந்த நாட்டில் வாழும் மக்கள் அனைவருக்குமே ஆறுதலளிக்க வேண்டும். வல்வெட்டித்துறைச் சம்பவத்தில் துப்பாக்கிப்பிரயோகத்தில் மாண்ட ஓர் இளைஞனின் மரணம் பற்றி நீதிபதியின் விசாரணை நடைபெற்றுவருகிறது. இதே சமயம் விசாரணைக் கமிஷன் நியமிக்கவேண்டும் என்று மக்கள் பிரதிநிதிகளும் மற்றும் பலரும் கோரிவருகின்றனர். இச்சமயத்தில் சில 'தேசிய' பத்திரிகைகள் வல்வெட்டித்துறை 'கள்ளக்கடத்தல்காரரின் குகை' என்றும் கள்ளக்குடியயற்றத்தையொரு தொழிலாகச் செய்யும் இடம் என்றும், குறிப்பிட்டுக் கட்டுரைகளும் தலையங்கங்களும் எழுதுவதுதான் வியப்பாகவிருக்கிறது. வல்வெட்டித்துறையில் எல்லோருமே பணக்காரர்களாக இருக்கிறார்களென்றும் கட்டிடங்களும், புத்தம் புதியகார்களும் வல்வெட்டித்துறையில் காணலாம் என்றும் கூறி இதற்கு 'கள்ளக்கடத்தல்'தான் காரணம் என்ற அர்த்தப்பட பிரபல ஆங்கில வாரப் பத்திரிகையொன்று ஒரு கட்டுரையைப் பிரசுரித்திருக்கிறது. பெரிய பங்களாவில் வசிப்பவர்கள், பெரிய, விலையுயர்ந்த கார்கள் வைத்திருப்பவர்கள் எல்லோருமே கள்ளக்கடத்தல் பேர்வழிகள் என்று சொல்லலாமா? இதே வாரப்பத்திரிகையின் தினப்பதிப்பு எழுதிய தலையங்கமும், மற்றொரு புதிய ஆங்கிலத் தினசரி எழுதியுள்ள தலையங்கமும் வல்வெட்டித்துறையிலும், வட பகுதியிலுமிருந்து இராணுவத்தை அகற்றக்கூடாது என்று கூறுவதுடன் மேலும் அதிகமாக இராணுவத்தினரை அனுப்ப வேண்டுமென்று கூறுகின்றன.

கல்பிட், காலி மற்றும் தென்னிலங்கையில் கரையோரப் பகுதிகளில் கள்ளக்கடத்தல் சம்பவங்கள் கண்டுபிடிக்கப்படவில்லையா? அங்கெல்லாம் இராணுவம் பொலிஸ் காவல் வேண்டுமென ஏன் கூறவில்லை?

வல்வெட்டித் துறையும் வடபகுதியும் இந்நாட்டிலுள்ள பகுதிகள் தான். அங்குள்ள மக்களும் இந்நாட்டு மக்கள் தான். நீதிபதியின் மரண விசாரணை நடைபெற்றுக் கொண்டிருக்கிறது, விசாரணைக் கமிஷன் நடைபெறவிருக்கிறது. இச்சமயத்தில் வல்வெட்டித்துறையைப் பற்றி ஏன் இந்த விஷமப் பிரசாரம்?

ஆசிரியருக்குக் கடிதம்

# விசேஷ ஆணையாளர் கூறியவை உண்மையா?

4-4-67-ம் திகதிய 'ஈழநாடு' பத்திரிகையில் நகரவர்யிறுப்பாளர் சிலர் எழுதிய கடிதத்துக்கு மாநகர சபை விசேஷ ஆணையாளர்கள் எழுதிய பதில் கடிதம் பார்த்தோம். இதுபற்றி எங்கள் கருத்தையும் விளக்கத்தையும் தெரிவிக்க விரும்புகின்றோம்.

### நகரமண்டபம்

நகரமண்டபமாக 30 வருடங்களாகக் காட்சி அளித்த மண்டபம் இப்போது நாடக மேடையாகக் காட்சியளிக்கின்றது. இதனை நாடக மேடை என்று கருதவேண்டுமே தவிர நகரமண்டபம் என்று கருத முடியாது. கடந்த 30 வருடகாலத்தில் இங்கு வருகை தந்த வெளிநாட்டுப் பிரமுகர்கள், ஜனாதிபதிகள், பிரதம மந்திரிகள், அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள் எவராவது இந்த நகரமண்டபம் நவீன ஏற்பாடுகளுடன் விளங்கவில்லை என்றும், இதனைத் திருத்த வேண்டும் என்றுகூறவில்லை ஆனால் நல்லதொரு நகர மண்டபம் வடக்கில் இருக்கிறது என்றே பெருமையுடன் புகழ்ந்து சென்றனர். ஆனால் இப்போது வந்த மந்திரியும் அவர் சகாக்களும் தானா இதனைத் திருத்த வேண்டும் என்று கூறினர். கடந்த 30 வருடத்தில் இதனைத் திருத்த வேண்டும் என்று எவராவது கூறியதுண்டா? 30 வருடத்தில் இல்லாத குறை இப்போது எப்படி வந்தது. இதனை விசேட ஆணையாளர்கள மறுக்க முடியுமா?

இது நாடகமேடையாகக் காட்சியளிக்கிறது என்பதே உண்மை. நாடக மேடை என்று பார்த்தாலும் இது சிறந்த நாடக மேடை அல்ல. கொழும்பிலுள்ள லயனல்வென்ட் தியேட்டர், ஆட்ஸ்கவுன்ஸில் மண்டபம் இவைகளுடன் ஒப்பிட்டுப் பார்க்கும்போது இந்த நாடகமேடை தரம்குறைந்தது. இதனைக்கூட யாரும் மறுக்க முடியாது. விஷேட ஆணையாளர்கள் நிர்வாகத்தில் நகரமண்டபம் நாடக மேடை ஆகிற்று.

மேலும் சபை இருந்த காலத்தில் கல்வி, கலாச்சார நிகழ்ச்சிகளுக்காக மாநகர மண்டபம் இலவசமாகப் பொதுமக்களுக்கு வழங்கப்பட்டு வந்துள்ளது. அத்துடன் உள்ளூர்க் கலை, கலாச்சாரங்களை வளர்த்தார்கள். இப்போது இந்த மண்டபம் ஏன் இலவசமாக வழங்கப்படுவதில்லை.

### உற்சவகால இலவச சேவை

சபை இருந்த காலத்தில் இலவசமாக நீர், மின்சார வசதிகள், கோவில் உற்சவங்களுக்கு வழங்கப்பட்டதை விசேட ஆணையாளர்கள் ஒப்புக் கொண்டுள்ளனர். ஏற்கனவே வராத ஒரு 'சர்ச்சாச்சை' வருமென்று எண்ணி விசேட ஆணையாளர்கள் இந்த வசதியை நிறுத்தி இருப்பது பொது மக்களுக்கு அளிக்கப்பட்ட அநீதியாகும். கடந்த 30 வருட காலத்தில் இதைத் தவறானது என்று கணக்குப் பரிசோதனைப் பகுதியினரோ, உள்ளூராட்சி ஆணையாளரோ, உள்ளூராட்சி அதிகார சபையோ மாநகர சபை உயர்தர உத்தியோகத்தர்களோ குறிப்பிட்டது கிடையாது. 30 வருட காலத்தில் நடைபெறாதது இனிமேல் எப்படி வர முடியும்? தொடர்ந்து அளிக்கப்பட்டு வந்த சேவையை எப்படி நிறுத்த முடியும்?

### கொழும்புத்துறை நீர் விநியோகம்

சபையும், முதல்வரும் திட்டமிட்ட வேலைகளைப் பூர்த்தி செய்வது மராமத்து இன்ஜினியரின் கடமையாகும். நல்ல ரகப் பொருட்களை வாங்குவது இன்ஜினியரின் கடமையாகும். நகர மண்டபத் திருத்த வேலைக்கு பெயின்ற் வாங்கும்போது நல்ல ரகப் பெயின்ற் வால்குவதாகக் கூறி "... பெயின்ற் ...... ஸ்தாபனத்தாரிடம் வாங்கவில்லையா? இவர் இதற்கான அனுமதியை விசேட ஆணையாளர்களிடம் பெற்று வாங்கினர்? இதே போன்று கொழும்புத்துறை நீர் விநியோகத்திற்கு நல்ல குழாய்களை வாங்க வேண்டியது மராமத்து இன்ஜினியரின் கடமை என்பதை யாரும் மறைக்கவோ அல்லது மறுக்கவோ முடியுமா?

### ஆரியகுளத்தில் பொதுசன மலகூடம்

[illegible] இடிக்கச் சொல்லும் அதிகாரம் மேயருக்குக் கிடையாது. அந்த அதிகாரம் சபைக்கே உண்டு. சபையில் இந்த விஷயம் முடிவு செய்யப்படவில்லை. மேலும் வேறொரு இடத்தில் மலகூடம் அமைக்க இருப்பதாகக் கூறப்பட்டுள்ளது, இந்த இடம் எங்கே? வேலை ஆரம்பிக்கப்பட்டதா? ஒன்றும் தெரியவில்லை சபையின் டிப்பொசிட் பணத்தில் எந்தப் பணமும் சிறுபான்மைத் தமிழ்மசகளால் இம்மலகூட வேலைக்கு என்று கட்டப்படவில்லை. அப்படிப்பட்ட பணம் எப்போது கட் ப்பட்டது? பணம் எவ்வளவு? நாம் இருந்தபோது இப்படி ஒன்றும் இல்லையே! இப்போது எப்படி வந்தது?

### ஆணைக்குழுக் கூட்டங்கள்

ஆணைக்குழுவின் கூட்டங்கள் சபையின் கூட்டம் ஒன்றினைப் போன்றது என்று விசேட ஆணையாளர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். சபையின் கூட்டத்தில் பார்வையாளராக இருப்பதற்கு பொதுமக்கள், பத்திரிகையாளர்கள் அனுமதிக்கப்படுவது யாவரும் அறிந்ததே. ஆனால் இவர்களது ஆணைக்குழுக் கூட்டத்திற்கு எவரும் அனுமதிக்கப்படுவதில்லையே, ஏன்? இந்தத் திரைமறைவு எதற்காக? கடிதமூலம் பேட்டி கோரிய முன்னாள் அங்கத்தவர் சிலருக்கு திரு. பெனண்டோ பேட்டி தந்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது. 1966-ம் ஆண்டு அக்டோபர் மாதத்தில் எழுதிய கடிதத்திற்கு 1967-ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 20-ம் திகதி பேட்டி தந்தார். அதுவும் 4 மாதம் கழித்து. பேட்டிதந்த நேரமே சில நிமிடங்கள். மறுமுறை வரும்போது 3 நாட்கள் நிற்பதாகவும், எங்களது குறைகளை விசாரிப்பதாகவும கூறினர். ஆனால் மறுமுறை மார்ச் மாதத்தில் வந்தார். வந்த அன்றே புறப்பட்டுப் போய்விட்டார்

சிறப்பு ஆணையாளர் ஒருவரின் சேவை வாரத்தில் ஒவ்வொருநாளும் கிடைக்கிறதாகக் கூறப்பட்டுள்ளது. மராமத்து, மின்சார வேலை சம்பந்தமாகப் பொறுப்பாகவுள்ள சிறப்பு ஆணையாளர், மராமத்து இன்ஜினியருடனும், ஒரு குறிப்பிட்ட அரசியற் கட்சி அங்கத்தவர்களுடனும் சார்பாக இருந்து கொண்டு பாரபட்சம் காட்டிவருவதாகக் கருதுகின்றோம். இதற்காகத்தான் நடுநிலைமையில் இவைகளை விசாரிக்கக்கூடிய திரு. பெனன்டோவைச் சந்திக்க முயற்சித்தனர் மக்கள். அவரைச் சந்திப்பது தான் முயற்கொம்பாக இருக்கிறதே! இப்படி இருக்கையில் மக்களின் ஒரு சாரார் விசேட ஆணையாளர்களிடமிருந்து எப்படிச் சேவையை எதிர்பார்ப்பது?

### நீதிமன்கறக் ட்டணங்கள்

சபைக்கு எதிராக உள்ள வழக்குகளுக்குச் செலவிடப்படும் பணம் சபையே செலுத்த வேண்டுமென்று குறிப்பிடப் பட்டுள்ளது. சபையைக் கலைத்ததற்குப் பொறுப்புடையவர் கௌரவ உள்ளூராட்சி மந்திரியாகும். இதனுல் ஏற்படும் செலவுக்கு அவரே ஜவாப்தாரி. இச்செலவுப் பணம் மத்திய அரசாங்கத்தால் கொடுக்கப்பட்டிருக்க வேண்டும். இதனை மத்திய அரசாங்கம் தான் கொடுத்திருக்க வேண்டும் என்று விஷேட ஆணையா

(5-ம் பக்கம் பார்க்க)

## நாட்டிலும் நகரிலும்

முந்திய நாள் இரவு சுமார் எட்டுமணி இருக்கும். புழுக்கம் தாங்கமுடியாமல் நடு முற்றத்திலிருந்து கொண்டு களங்கமற்ற வானில் கர்க்கடகராசியில் குளிர் மதியானது குருபகவானுடன் அழகுறச் சஞ்சரிக்கும் காட்சியைப் பார்த்துக்கொண்டிருந்தேன்.

திடீரென்று என் பார்வை வட்டத்துள் வியாழனைப் போலவே பிரகாசமுள்ள இன்னுமொரு தாரகை தோன்றியது. இதை முன்னர் காணவில்லையே என்று அதிசயித்துக்கொண்டிருக்கும்போது அது மெதுவாக நகர்ந்துசெல்வது தெரிந்தது. சுமார் இரண்டே நிமிடங்களுக்குள் அந்த விரையும் விண்மீன் தெற்கு வடக்காக ஆகாய வீதியைத் தாண்டி மறைந்துவிட்டது.

இந்தக் காட்சியைப் பார்த்துவிட்டு, 'நட்சத்திரம் எப்படிப் பறக்கிறதென்று' ஆச்சரியத்தில் மூழ்கிய வயதும், வைதிகமும் நிறைந்த எனது தாயாருக்கு அதன் தாற்பரியத்தை விளக்கினேன்.

இதைப்போல் இன்னும் பல செயற்கைக்கோளங்கள் ஒவ்வொருநிமிடமும் ஆகாய பவனத்துக்கு மேலே பூமியை வலம்வந்துகொண்டிருக்கின்றன. இவற்றை விஞ்ஞானத்தில் முன்னேறியுள்ள அமெரிக்கா, ரஷ்யா முதலிய நாடுகள் அண்ட வெளிக்கு அனுப்பி, வானரசு புரியும் நோக்கத்துடன் அங்குள்ள நிலைமைகளை ஆராய்கின்றன. அவற்றை யாரும் செலுத்துவதில்லை. பவனத்துக்கு மேல் போனவுடன் தம் சொந்த வேகத்திலேயே காலவரையின்றிப் போய்க்கொண்டேயிருக்கும் அவை வெள்ளிகளைப்போல ஜொலிப்பதேனென்றால் சந்திரனைப்போல சூரியனின் ஒளியைப்பெற்றுப் பிரதிபலிப்பதால்.

இதெல்லாவற்றையும் கேட்டுக்கொண்டிருந்துவிட்டு அம் மூதாட்டி கொடுத்த தீர்ப்பு என்னை வெகுநேரம் சிந்தனையில் ஆழ்த்திவிட்டது. அதென்னவென்றால்:-

'உப்பிடித்தான் சூரபத்மனும் கொஞ்சநாள் மாய வித்தை காட்டிக்கொண்டு திரிஞ்சவன்'!

ஃ ஃ ஃ

இலங்கையில் இப்பொழுதெல்லாம் அழகுராணிப் போட்டிகள் புழுத்துப் போய்விட்டன. மிஸ் சிலோன், மிஸ்லங்கா எல்லாம்போய், மிஸ் சந்திராபீடி, மிஸ் சூரியா பிண்ணாக்கு, மிஸ் சுக்கிரா கருவாடு என்றெல்லாம் மூலைக்கு மூலை அழகுப் போட்டிகள் நடக்கின்றன.

இவை எல்லாவற்றையும் விட விசித்திரமான சில போட்டிகள் வெளிநாடுகளில் நடக்கின்றன.

தென் அமெரிக்காவில் உள்ள ஆர்ஜெண்டினா என்ற நாட்டில்வேள்விக்கடாவுக்கு தீன் ஊட்டியதுபோல, பெண்களுக்கு கடந்த இரு வாரங்களாக மிகவும் புஷ்டியான உணவுகளை வில்லங்கமாக ஊட்டிவருகிறார்களாம். காரணமென்னவென்றால் அங்கு இன்னும் சில நாட்களில் 'மிஸ் கொழுத்த குமரி' என்றதோர் போட்டி நடக்கப் போகிறதாம். இதற்காக போட்டியிடும் குண்டோதரிகள் தினமும் அந்தர் கணக்கில் ரொட்டியையும், வெண்ணையையும், வாழைப் பழத்தையும் விழுந்து விழுந்து விழுங்குகிறார்களாம். முதலாம் நம்பர் கொழுத்த பெண்ணுக்கு மகுடம் சூட்டப்படும். இவர்களைக்

[5-ம் பக்கம் பார்க்க]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ‘உபரி தானியங்களை முன்வந்து தாருங்கள்’

## விவசாயிகளுக்கு மே. வங்காள முதல் மந்திரி கோரிக்கை

கல்கத்தா, ஏப்ரல் 18

ராஜ்யத்திலுள்ள விவசாயிகள் தமது உபரி தானியங்களைத் தாமாகவே முன்வந்து அரசாங்கத்திடம் ஒப்படைக்குமாறு மேற்கு வங்காள முதல் மந்திரி திரு. அஜொய் கோஷ் கேட்டுள்ளார்.

கட்டாய முறைகளைக் கைவிட்டு, விவசாயிகள் தாமாகவே முன்வந்து, தம்மிடமுள்ள உபரி தானியங்களை அரசாங்கத்திடம் ஒப்படைக்கும் வழியைத் தமது அரசாங்கம் பின்பற்றமுடிவு செய்துள்ளதாகவும், அதற்கு மக்கள் ஒத்துழைப்பு அளிக்க வேண்டுமெனவும் அவர் வேண்டியுள்ளார்.

கொள்வனவு வெற்றிகரமாக்கும் நோக்கத்துடன் தாமும், தமது சகாக்களும் பல பகுதிகளிலுமுள்ள விவசாயிகளிடையே சுற்றுப் பிரயாணம் செய்யப்போவதாகவும் முதல் மந்திரி தெரிவித்தார்.

டில்லி பொலிசார் விவகாரம்

# ‘நெருப்புடன் விளையாடாதீர்’

## பி. எஸ். பி. தலைவர் எச்சரிக்கை

புதுடில்லி, ஏப்ரல் 18

வேலைநிறுத்த ஆர்ப்பாட்டம் செய்த புதுடில்லிப் பொலிசாரில் 99.9 சதவீதம் வேலைக்குத் திரும்பியுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது

இதற்கிடையில், இவர்களுக்கு ஆதரவாக சம்யுக்த சோஷலிஸ்டுகளும், இரண்டு கம்யூனிஸ்ட் தலைவர்களும் பொது வேலைநிறுத்தமொன்றில் இறங்குவதற்கு முடிவு செய்துள்ளதைப் பிரஜா சோஷலிஸ்ட் கட்சித்தலைவர் திரு. எம். ஜி. கோரே, பூனாவில் ஒரு கூட்டத்தில் பேசுகையில் கண்டித்துள்ளார்.

‘நெருப்புடன் விளையாட வேண்டாம்’ என அவர்களை எச்சரித்த அவர், அவர்களுடைய பொது வேலைநிறுத்தத்தைக் கைவிடும்படி வேண்டுகோள் விடுத்தார்.

ஆலை ஊழியரும் கல்லூரி மாணவரும் போல் பொலிசாரும் ஆர்ப்பாட்டங்களில் இறங்குவது சரியல்ல என அவர் கருத்து வெளியிட்டார்.

# வட வியட்னும் கடற்படை தளங்கள் மீது குண்டுவீச்சு

## அமெரிக்கா கடும் தாக்குதல்

சைகோன், ஏப். 18

அமெரிக்க ஜெட் விமானங்கள் நேற்று வட வியட்னும் கடற்படைத் தளங்கள் மீது கடும் குண்டுவீச்சை நடாத்தின. இதனுல் வட வியட்னும் கடற்படைகளுக்குப் பலத்த சேதமேற்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

ஏறத்தாழ 2700 வியட்காங்கியர் இத்தாக்குதலில் கொல்லப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

‘வியட்னும் போர்த் திட்டத்தில் முக்கிய அம்சம் ஒன்று நிறைவேற்றப் பட்டுள்ளது’ என்று இந்தத் தாக்குதலை, வியட்னுமிலுள்ள அமெரிக்க இராணுவத் தலைமை அதிகாரி வர்ணித்துள்ளார்.

# புதுச்சேரி சட்டசபையில் எதிர்க்கட்சிகள் வெளிநடப்பு

புதுச்சேரி, ஏப். 18

புதுச்சேரி சட்ட சபையில் நேற்று எதிர்க் கட்சிகள் அனைத்தும் வெளிநடப்புச் செய்தன.

அலுவல் ஆலோசனைக் கமிட்டியைக் கலந்துகொள்ளாது, சபை நிகழ்ச்சிகளில் பட்ஜெட் பற்றிய பொது விவாதம் சேர்க்கப்பட்டிருந்ததை எதிர்க்கட்சியினர் ஆட்சேபித்தனர்.

‘அசாதாரண சூழ்நிலைகளில், முன் அனுமதியின்றிப் பொது விவாதங்கள் அனுமதிக்கப்படலாம்’ என்று சபாநாயகர் அளித்த தீர்ப்பு, எதிர்க் கட்சிகளுக்குத் திருப்தி அளிக்கவில்லை. ஆகவே, அவர்கள் வெளிநடப்புச் செய்தனர்.

ஆனுல், 5 நிமிடங்களுக்குப்பின், அவர்கள் மீண்டும் தமது ஆசனங்களுக்குத் திரும்பினர்.

# தனியார் மின்சார விநியோக நிறுவனங்கள்

## அரசாங்கம் ஏற்கும் என்கிறுர் அண்ணு

தஞ்சாவூர், ஏப். 18

ராஜ்யத்திலுள்ள தனியார் மின்சார சப்ளை காப்பரேஷன்களைத் தமது அரசாங்கம் படிப்படியாக மேற்கொள்ளக்கூடுமென தமிழக முதன் மந்திரி திரு. சி. என். அண்ணுதுரை நேற்று இங்கு ஒரு கூட்டத்தில் பேசகையில் கூறினுர். தஞ்சாவூருக்கருகில் அறந்தாங்கி என்னுமிடத்தில் பேசுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இப்போதைய நிலவுரிமை வரம்பில் மாற்றம் செய்ய அரசாங்கம் உத்தேசிக்கவில்லை எனக் குறிப்பிட்ட முதல்மந்திரி, தற்போதைய சட்டத்தில் சில மாற்றங்கள் செய்யவேண்டியிருக்குமெனக் கூறினுர்.

தனியார் மின்சார சப்ளை காப்பரேஷன்கள், விவசாயிகளுக்குப் போதிய உதவி அளிக்கத் தவறிவிட்டதாகவும், ஆகவேதான் அரசாங்கம் அவற்றைப் படிப்படியாக மேற்கொள்ளத் திட்டமிட்டுள்ளதாகவும் திரு. சி. என். அண்ணுதுரை மேலும் கூறினுர்.

### லோகசபை மீண்டும் மே 22-ல் கூடும்

புதுடில்லி, ஏப். 18

லோக சபையின் அடுத்த கூட்டம் மே 22-ம் திகதி

# பாகிஸ்தானின் நச்சரிப்பு

புது டில்லி, ஏப்ரல் 13

இந்தியாவினுள் அத்துமீறிப் பிரவேசித்து, எச்சரிக்கையையும் பொருட்படுத்தாது பறந்துசென்ற பாகிஸ்தான் விமானமொன்று அண்மையில் சுட்டு வீழ்த்தப்பட்ட சம்பவம் பற்றிப் பாகிஸ்தான் மீண்டும் மீண்டும் ஆட்சேபக் குறிப்பு அனுப்பி வருவதுபற்றி இந்திய இராணுவ அதிகாரி ஒருவர் இங்கு அதிருப்தி தெரிவித்தார்.

பாகிஸ்தான் வேண்டுமென்றே இச்சம்பவத்தைப் பெரிதாக்க முயல்கிற தென்றும், இத்தகைய சம்பவங்களில் கூட்டு விசாரணைக்கே இடமில்லை எனவும் அவ்வதிகாரி மேலும் குறிப்பிட்டார்.

# பொலிஸ் ஒருவரை நாகர் கொன்றனர்

புது டில்லி, ஏப்ரல் 18

தலைமறைவு நாகர் கோஷ்டி ஒன்றுடன் ஏற்பட்ட மோதலில், மணிப்பூர் விசேஷ பொலிஸ் படையைச் சேர்ந்த ஒருவர் கொல்லப்பட்டார். ஆந்திரா பிரதேஷ் ரிசேர்வ் படையைச் சேர்ந்த இருவருக்குத் தோட்டாக்காயங்கள் ஏற்பட்டுள்ளன.

# அமெரிக்க முடிவுக்கு கண்டனம்

புதுடில்லி, ஏப்ரல் 18

பாகிஸ்தானுக்கு இராணுவ உதிரிப் பாகங்களை மீண்டும் விற்பதென்ற அமெரிக்க தீர்மானத்தை அகில பாரத சமாதான சபையும், ஆபிரிக்க - ஆசிய ஒற்றுமைக்கான பாரத சங்கமும் கண்டித்துள்ளன.

# கனடாவின் புதிய கவர்னர் ஜெனரல்

ஒட்டாவா, ஏப்ரல் 18

திரு. ரோலண்ட் மிச்சினர், நேற்று ஒட்டாவாவில் கனடாவின் புதிய கவர்னர் ஜெனரலாகப் பதவியேற்றுர்.

# மொரார்ஜி கருத்து

புதுடில்லி, ஏப்ரல் 18

உலகிலுள்ள மிக வரி விதிப்புள்ள நாடுகளில் இந்தியாவும் ஒன்று என்பதைத் தாம் ஒப்புக் கொள்ளவில்லை என்று இந்திய துணைப்பிரதமர் திரு. மொரார்ஜி தேசாய், நேற்று நிருபர்களிடையே பேசுகையில் கூறினுர்.

விலை ஏற்றத்தைக் குறைக்க, குறைந்த செலவும், அதிக சேமிப்பும் அவசியமென அவர் கருத்து தெரிவித்தார்.

# வீடு தீக்கிரை

பளை, செவ்வாய்

கசிசார்வெளி என்னும் கிராமத்தில் க. வீரகத்தி என்பவரது வீடு தீப்பிடித்து எரிந்து சாம்பலாகியது. வீட்டிலிருந்த பொருட்கள் யாவும் முற்றுக சேதப்பட்டதாகத் அறிவிக்கப்பட்டுள்ளது.

சிறுவர்கள் வெடி கொளுத்தி விளையாடிய போதே இவ்விதம் வீட்டில் தீப்பிடித்து சேதம் ஏற்பட்டதாகத் தெரிகிறது.

[5-ம் கலத் தொடர்ச்சி]

களுக்கே ஆதரவு அளிக்குமெனவும் திரு. சக்ளா குறிப்பிட்டுள்ளார்.

குவெயித்திற்கு இந்தியா தனது தூதுவர் ஒருவரை நியமிக்கத் தீர்மானித்துள்ளதுபற்றியும் திரு. சக்ளா இங்கு அறிவித்துள்ளார்.

[illegible] என்று [illegible] இடம்பெறும் என இங்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

# தென் அரபியாவுக்கு காபந்து அரசாங்கம்?

லண்டன், ஏப். 18

தென் அரபிய சமஷ்டி பற்றி ஐ. நா. தகவல் அறியும் கமிஷனுடன் தாம் பல அம்சங்களையிட்டு ஒரு விரிவான உடன்படிக்கைக்கு வந்துள்ளதாக பிரிட்டிஷ் வெளியுறவு மந்திரி திரு. ஜோர்ஜ் பிரவுண் இங்கு தெரிவித்துள்ளார்.

தென் அரபியாவில் ஒரு முடிவு எடுக்கும்வரை ஒரு காபந்து அரசாங்கத்தை நிறுவுவதும் இந்த அம்சங்களில் ஒன்ருகும் என அவர் குறிப்பிட்டார்.

‘தென் அரபியபிரச்னையில் பயன் தரக்கூடிய பங்கினை ஐ. நா. சபை ஆற்றமுடியும். அப்படி அது செய்யுமென நான் நம்புகிறேன்’ என்று திரு. பிரவுண் கூறியுள்ளார்.

### ‘புளோஸி’ செய்தி

இதற்கிடையில் சமவிலிருந்து வெளியிட்டுள்ள செய்தியொன்றில் தென் அரபியாவின் தேசிய விடுதலை இயக்கமான ‘புளோஸி’ தென் அரபியப் பிரச்னையைத் தீர்க்க பிரிட்டன் தம்முடன் பேச்சுவார்த்தைகள் நடாத்த வேண்டுமென்று கேட்டுள்ளது தமது இயக்கத்தை தென் அரபிய மக்களின் ஒரே தேசிய இயக்கமாக பிரிட்டன் அங்கீகரிக்க வேண்டுமெனவும் அது வலியுறுத்தியுள்ளது.

# கானு இராணுவ தளபதி புரட்சியில் கொல்லப்பட்டார்

ஆக்ரா, ஏப்ரல் 18

**கானுவில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற இராணுவப் புரட்சிகளின்போது, கானு இராணுவத் தளபதி ஜெனரல் கட்டுக்கா, புரட்சிகர இராணுவ வீரர்களின் குண்டுகளுக்குப் பலியானதாக இங்கு அறிவிக்கப்பட்டுள்ளது.**

இந்த இராணுவப் புரட்சி ஆக நான்கு மணித்தியாலங்களே நீடித்தது. சற்று நேரத்தில் அது முறியடிக்கப்பட்டது. 120 இராணுவ வீரர், இதுசம்பந்தமாகக் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

மற்றும் கைதுசெய்யப்பட்ட சில இராணுவஅதிகாரிகள், தமக்கும், புரட்சிக்கும் தொடர்பு உள்ளதை மறுத்துள்ளனர்.

‘முறியடிக்கப்பட்ட இப்புரட்சி, முன்னுள் ஜனுதிபதி நிக்ருமாவுக்கு ஆதரவானதொன்றெனக் கருதுவதற்கு எவ்வித ஆதாரமும் இல்லை’ என்று கானுவின் அரசியல் தலைவர் ஜெனரல் அங்காரா தெரிவித்துள்ளார்.

# அடுத்த இந்திய தேர்தலில் ஒரேநாளில் வாக்குப்பதிவு?

புதுடில்லி, ஏப். 18

அடுத்த இந்திய பொதுத் தேர்தலில், ஒரேநாளில் வாக்குப்பதிவைச் செய்து முடிக்கும் ஆலோசனைஒன்று இங்கு ஆராயப்பட்டு வருகிறது.

ராஜ்ய தேர்தல் அதிகாரிகளும் யூனியன் பிரதேச தேர்தல் அதிகாரிகளும் இங்கு சந்தித்து இதுபற்றிப் பேச்சுவார்த்தைகள் நடாத்தி வருகின்றனர்.

ஒரே நாளில் வாக்குப்பதிவை செய்துமுடிப்பதை இந்திய தேர்தல் அதிகாரி திரு. சுந்தரம் வலியுறுத்தியுள்ளார். அப்படி ஒரு நாளில் நடத்திமுடிப்பதற்குப் பொதுமக்களின் ஒத்துழைப்பையும் வேண்டியுள்ளார்.

# ‘காஷ்மீர் இந்தியாவின் பிரிக்க முடியாத அங்கம்’

## சக்ளா வலியுறுத்தல்

குவெயித், ஏப்ரல் 18

குவெயித்தில் தமது 3 நாள் அன்பு விஜயத்தைமுடித்துக் கொண்டு, இந்திய வெளியுறவு மந்திரி திரு. சக்ளா நேற்று டெஹ்ரான் சென்றடைந்தார்.

டெஹ்ரானுக்குப் புறப்பட்டுச் செல்ல முன்னர், பத்திரிகை நிருபர்களிடம் பேசுகையில் தமது விஜயத்தின்மூலம் பாரதத்துக்கும் குவெயித்துக்குமிடையே உள்ள நல்லுறவு மேலும் உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாகத் தாம் நம்புவதாகத் தெரிவித்தார்.

### உறவுகள் வலியுறுத்தல்

குவெயித்தின் வெளியுறவு மந்திரியுடன் திரு. சக்ளா நடாத்திய பேச்சுவார்த்தைகளின் இறுதியில், இருவெளியுறவு மந்திரிகளின் கூட்டறிக்கை ஒன்று வெளியிடப்பட்டது.

அக்கூட்டறிக்கையில், இரு நாடுகளுக்குமான நேச உறவுகள் மீண்டும் வலியுறுத்தப்பட்டன. பொருளாதாரம், கலாச்சாரம் மற்றும் துறைகளிலும் இரு நாடுகளுக்கிடையேதொடர்புகளை அபிவிருத்தி செய்ய வேண்டுமெனக் கூறப்பட்டுள்ளது.

### காஷ்மீர்

காஷ்மீர் இந்தியாவின் பிரிக்க முடியாத அங்கமென்று அவ்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்குமிடையே இருக்கக்கூடிய பிரச்னைகள் யாவும், அந்நியர் குறுக்கீடின்றி இரண்டு நாடுகளும் தமக்குள்ளேயே பேசி முடிக்க வேண்டியனவ என்றும் கூறப்பட்டுள்ளது.

மேலும் மண்டலசார்பற்ற கொள்கையிலும், சமாதான சகவாழ்விலும் தமக்குள்ள நம்பிக்கையை பாரதமும் குவெயித்தும் இவ்வறிக்கையில் மீண்டும் வலியுறுத்தியுள்ளன.

### இஸ்ரேல்

இஸ்ரேலுடன் தூதகத் தொடர்பு கொள்வதில்லை என்ற பாரதத்தின் தீர்மானமும், இஸ்ரேலுக்கும் அரபிய நாடுகளுக்குமிடையேயான பிரச்னைகளில் இந்தியா தொடர்ந்தும் அரபிய நாடு

(3ம் கலம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "இவர்களுக்கு பட்டதாரிச் சம்பளம் இல்லாதது தமிழுக்கு அவமரியாதை

## கம்பஹா எம். பி. பார்லிமெண்டில் எழுப்பப்போகும் பிரச்னை

கொழும்பு, செவ். 'தமிழ் மொழியில் தகுதி பெற்ற பட்டதாரிகளுக்குப் பட்டதாரிச் சம்பளம் கொடுக்காதது தமிழ்மொழிக்காற்றும் அவமரியாதையல்லவா?' என்று கல்வி மந்திரி திரு. ஐ எம். ஆர். ஏ. இரியகொல்லையிடம் கம்பஹா எம். பி. திரு. எஸ். டி. பண்டாரநாயக்கா இம்மாதம் 21-ம் திகதி பார்லிமெண்ட் கூடும்போது கேட்கவிருக்கிறார்.

கல்வி மந்திரியைக் கேட்பதற்காக அவர் முன்னறிவித்தல் கொடுத்துள்ள கேள்விகள் வருமாறு:-

சிங்களம், பாளி, சமஸ்கிருதம் ஆகிய மொழிகளில் தகமைபெற்ற பட்டதாரிகளுக்குப் பட்டதாரிச் சம்பளத்தைக் கொடுத்து, சிங்களம், பாளி, தமிழ் அல்லது சிங்களம், சமஸ்கிருதம், தமிழ் ஆகிய மொழிகளில் தகமை பெற்ற பட்டதாரிகளுக்கு அதே சம்பளத்தைக் கொடுக்காதது நியாயமற்றதென்பதைஅவர் அறிவாரா?

சிங்களம், பாளி, தமிழ் ஆகிய மொழிகளில் அல்லது சிங்களம், சமஸ்கிருதம், தமிழ் ஆகிய மொழிகளில் தகுதிபெற்ற 'பிராச் சீன பண்டித' பட்டதாரிகளுக்கும் தற்பொழுது ஆசிரியராகக் கடமையாற்றுபவர்களுக்கும் சிங்களம், பாளி, சமஸ்கிருதம் ஆகிய மொழிகளில் தகுதிபெற்ற 'பிராச்சீன பண்டிதருக்கு' கொடுக்கப்படும் பட்டதாரிச் சம்பளத்தைக் கொடுப்பதற்கு அவர் வேண்டிய நடவடிக்கைகள் எடுப்பாரா?

# யாழ். ரஸிக ரஞ்சன சபா இசை விழா

## இன்று ஆரம்பம்

யாழ்ப்பாணம், புதன் யாழ்ப்பாணம் ரஸிக ரஞ்சன சபாவின் 16-வது ஆண்டு இசைவிழா இன்று மாலை ஆரம்பமாகிறது. யாழ்ப்பாணம் மணிக்கூட்டு வீதியிலுள்ள வண்ணை அரசடி விநாயகர் ஆலய வீதியில் இவ் இசைவிழா தொடர்ந்து ஒன்பது நாட்களுக்கு நடைபெறும்.

இன்றைய நிகழ்ச்சிகள் வருமாறு:-

5-30—6-45 குமுக்கா கே. எம். கணபதிப்பிள்ளை கோஷ்டியினர் நாதஸ்வரம் 6-45—7-45 திரு. ரி. பாலசுந்தரம் - பாட்டு திரு. எஸ். சிவபாதசுந்தரம் - வயலின் செல்வன் ரவிச்சந்திரன் மதியாபரணம் - மிருதங்கம் 7-45—8-00 தலைமையுரை: பிரம்மஸ்ரீ ஆர். மூர்த்தி ஐயர் 8-00—9-00 செல்வி சரோஜினி இராசதுரை பாட்டு பிரம்மஸ்ரீ எஸ். சர்வேஸ்வரசர்மா - வயலின் திரு. வி அம்பலவாணர் மிருதங்கம் 9-00—9-30 லயவிந்நியாசம் [மிருதங்கம்] திரு. எம. என். செல்லத்துரை 9-30 10-45 வில்லுப்பாட்டு திருப்பூங்குடி வி. க. ஆறுமுகம் ஆசிரியர் குழுவினர் கலாவினோதன், க. நா கணபதிப்பிள்ளை - நகைச்சுவை, உடுக்கிசை ஈழநல்லூர் எஸ். எம். சோமசுந்தரம் - அர்மோனிம் லய ஞானமணி என். தங்கம் மிருதங்கம், டோல்க்கி. கேசாவிலூர் எஸ். ஈ. நாதன் - விற்கடம்.

யா. ர. ர. சபாதலைவர் ருதி. ஆர். சி. மன்மதராயன் ஈழநல்லூர் ஆர்மோனிய வித்துவான் எஸ். எம். சோமசுந்தரத்துக்கு பொன்னுடை போர்த்துக் கௌரவித்தல். கலையரசு கே. சொர்ணலிங்கம் ஆசியுரை வழங்குவார்.

வடபகுதி இ. போ. ச உத்தியோகத்தர்

# சிங்களத்தில் கடமையாற்ற வற்புறுத்தப்படமாட்டாரா?

## தேசிய சேவை அமைச்சரிடம் இலக்ஷ்மன் ஜெயக்கொடி கேட்பார்

கொழும்பு, செவ். 'வடபகுதி இ. போ. ச. அலுவலகத்தில் கடமையாற்றும் உத்தியோகத்தர்களை சிங்களத்தில் கருமமாற்ற வற்புறுத்தமாட்டாரா என்பது பற்றி தேசிய சேவை அமைச்சர் திரு. வி. ஏ. சுகததாஸாவிடம் டிவுவப்பிற்றிய எம். பி. திரு. இலக்ஷ்மன் ஜயக்கொடி கோரவிருக்கிறார்.

இம்மாதம் 21-ம் திகதி பார்லிமெண்ட் கூடும்போது தேசியசேவை அமைச்சரைக் கேட்பதற்காக திரு. இலக்ஷ்மன்ஜயக்கொடி முன்னறிவித்தல் கொடுத்துள்ள கேள்விகள் வருமாறு:

இ. போ. ச. யாழ்ப்பாணப் பிராந்திய அலுவலகத்திலும், கணக்குப் பிரிவிலும், பிரதேசக் கணக்குப் பிரிவிலும், உள்ளகக் கணக்குப் பிரிவிலும், பிரதேச அலுவலகத்துடன் இணைக்கப்பட்ட திடீர்ப் பரிசோதனை பிரிவிலும், பாதுகாப்பு பிரிவிலும், கிழக்கு மேற்கு, பருத்தித்துறைச்சாலை அலுவலகங்களிலும், பொறியியற் பகுதி விலை நிர்வாகப் பகுதிகள் ஆகியவற்றிலும் சேவைசெய்யும் உத்தியோகத்தர், எழுதுவினைஞர் ஆகியோரின் பெயர்களையும் அவர்களின் பதவிகளையும் அவர் கூறுவாரா?

இவர்கள் அனைவரையும் அரசகரும மொழியில் கடமைபுரியுமாறு கட்டாயப்படுத்துவாரா? இல்லையெனில் ஏன்? சிங்களத்தில் கடமையாற்ற இயலாதவர்களை உடனே பொருத்தமான இடங்களுக்கு மாற்றுவாரா? இல்லையெனில் ஏன்?

## ஸ்ரான்லி டி' சொய்சா இந்தோனேஷிய தூதுவராவார்?

கொழும்பு, செவ். இந்தோனேஷியாவின் இலங்கைத் தூதராக திரு. ஸ்ரான்லி டி' சொய்சா நியமிக்கப்படலாமெனத் தெரியவருகிறது.

திரு. எஸ். டபிள்யு. ஆர். டி. பண்டாரநாயக்காவின் அரசாங்கத்தில் நிரந்தர செயலாளராக இருந்திருக்கிறார்.

கரபந்தாட்டம்

## கொழும்பு வெற்றி

யாழ்ப்பாணம், புதன் கொழும்பு வெள்ளவத்தை கரபந்தாட்டக் கோஷ்டிக்கும், அரியாலை கரபந்தாட்டக் கோஷ்டிக்கும் இடையில் நடைபெற்ற சினேகிதபூர்வமான கரபந்தாட்டப் போட்டியில் கொழும்புக்கோஷ்டி வெற்றியீட்டியது. ஆரம்பத்தில் இருந்து முடிவு வரையும் விறுவிறுப்பாகக் காணப்பட்ட இப்போட்டியில் இரு கோஷ்டியுமே நன்றாக ஆடினர். இப்போட்டி முடிவில் கொழும்புக்கோஷ்டி 2-1 புள்ளிகளால் அரியாலையை வென்றது. இப்போட்டி அரியாலை சனசமூக நிலைய மைதானத்தில் நடைபெற்றது. திரு. கே. எஸ். மயில்வாகனம் மத்தியஸ்தம் வகித்தார்.

## கோண்டாவிலுக்கு வெற்றி

கோண்டாவில், செவ். கோண்டாவில் இந்து வாலிபசங்கத்தின் முதலாம் பிரிவுக்கோஷ்டிக்கும், திருநெல்வேலி இந்துவாலிப சங்கத்தின் 1-ம் பிரிவுக் கோஷ்டிக்குமிடையில் நடைபெற்ற சிநேகபூர்வமான கிரிக்கெட் போட்டியில் கோண்டாவில் இந்துவாலிப சங்கம் இரண்டு விக்கெட்டுகளால் வெற்றியீட்டியது.

## 'விளையாட்டுக்கள் மூலம் முன்னேறலாம்'

பளை, செவ்வாய் நாட்டுமக்களது முன்னேற்றத்தைபெருமபாலும் விளையாட்டுக்கள்மூலம் காண முடிகிறது.' எனப் புத்தாண்டு தினத்தையொட்டி இங்கு சென்ற 15 ந்திகதி தேசியதின விழாவில் யாழ்ப்பாணம் உதவிப்பொலிஸ் சுப்ரீன்டன் திரு. என். வீரசிங்க பேசுகையில் கூறினர்.

அவர் மேலும் பேசுகையில் பொலிசாருடன் பொதுமக்கள் ஒத்துழைப்பதால் நாட்டிலே ஒருசௌஜன்ன நிலை ஏற்பட முடியும் எனக் குறிப்பிட்டார்.

பச்சிலைப்பள்ளி காரியாதிகாரிதிரு. வ. கந்தப்பிள்ளை, புலோப்பளை கிராமசபைத் தலைவர் திரு. ஒ.ஜி. இராஜசூரியர் ஆகியோரும் உரை நிகழ்த்தினர். தேசிய தின விழாவையொட்டி நடைபெற்ற விளையாட்டுப்போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுச்கு திருமதி வீரசிங்க பரிசில்களை வழங்கினர்.

## பொங்கல் விழா

எழுதுமட்டுவாள், செவ். புதுவருடத்தினத்தையொட்டி எழுதுமட்டுவாள் கிராமமுன்னேற்றச் சங்கத்தாரால் ஒழுங்குசெய்யப்பட்ட பொங்கல்விழா கிராமசபைத்தலைவர் திரு. வே. அம்பலவாணர் தலைமையில் சிறப்பாக நடத்தப்பட்டது.

## புதிய நிர்வாகிகள்

நாரந்தனை, செவ்வாய் புளியங்கூடல் மகாமாரி சனசமூக நிலையத்தின் 1967-ம் ஆண்டு புதிய நிர்வாகசபை உறுப்பினர் தெரிவு நடைபெற்றது. பின்வருவோர் புதிய நிர்வாகிகளாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்: முத்துக்கிருஷ்ணன், உபதலைவர்: க. இளமுருகன், இணைச்செயலாளர்கள்: ஐ. செல்வராசா, மு விஜயரத்தினம், தனாதிகாரி: அ. தியாகராசா.

மற்றும் உறுப்பினர்கள்: பே. பொன்னுசாமி, க. பாலகணபதி, ந. நாகராசா, சு. தில்லைலிங்கம்.

கிரிக்கெட்போட்டி

# யங்லவ்வேர்ஸ் கோஷ்டி சாம்பியனாகியது

யாழ்ப்பாணம், புதன் நல்லூர் தெற்கு சனசமூக நிலையத்தினர் தமது 18-வது ஆண்டு விழாவையொட்டி நடாத்திய கிரிக்கெட் சுற்றுப் போட்டியின் சாம்பியன் ஆட்டம் யங்லவ்வேர்ஸ் கோஷ்டிக்கும் விநாயகர் கோஷ்டிக்கும் இடையே நடைபெற்றது. கடும் பலப் பரீட்சையில் ஈடுபட்ட இரு கோஷ்டியினரும் கடைசி வரைக்கும் வெற்றி தோல்வியறிய முடியாத வகையில் போட்டியிட்டனர். முடிவில் யங்லவ்வேர்ஸ் கோஷ்டியே சாம்பியன் என்று மத்தியஸ்தர் தீர்ப்புக் கூறினர்.

முதல் இனிங்சில் விநாயகர் கோஷ்டி 82 ஓட்டங்களும், யங்லவ்வேர்ஸ் கோஷ்டி 83 ஓட்டங்களும் பெற்றனர். இரண்டாவது இன்னிங்சில் விநாயகர் கோஷ்டி 45 ஓட்டங்களைப் பெற்றனது. யங்லவ்வேர்ஸ் கோஷ்டி 8 விக்கெட்டுகளை இழந்து 42 ஓட்டங்களைப் பெற்ற நேரத்தில் எதிர் கோஷ்டியினர் நேரம் சம்பந்தமாக ஆட்சேபம் தெரிவித்ததைத் தொடர்ந்து போட்டி நிறுத்தப்பட்டது. பின் மத்தியஸ்தர் மேற்கண்ட தீர்ப்பை வழங்கினர். திரு. ஜெயரத்தினம் மத்தியஸ்தராகக் கடமையாற்றினர்.

5 மைல்

# மரதன்ஓட்டபோட்டியில் 9 வயது சிறுவனின் சாதனை

யாழ்ப்பாணம், புதன் நல்லூர் தெற்கு சனசமூக நிலையத்தின் 18-வது ஆண்டு விழாவை ஒட்டி நேற்று முன்தினம் நடைபெற்ற 5 மைல் மரதன் ஓட்டப் போட்டியில் கலந்துகொண்ட 9 வயதுச் சிறுவனுன கனகரெத்தினம் வரதராசன் இத்தூரத்தை ஆச்சரியப்படத்தக்க வகையில் 29 நிமிடங்களில் ஓடி முடித்து ஒரு புதிய சாதனையை ஏற்படுத்தியுள்ளார்.

வயதுக் கட்டுப்பாடற்று நூற்றுக்கணக்கான வாலிபர்கள் கலந்து கொண்ட இப்போட்டியில் இச்சிறுவன் உள்ளூர்ப் போட்டியில் 5-வது இடத்தைப்பெற்றுன். வெளியூர் போட்டியில் அரியாலையைச் சேர்ந்த ந. கதிர்காமநாதன் முதலாவது இடத்தைப் பெற்றார். மற்றும் கிறீன்பீல்ட் விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த எஸ். எ. சில்வஸ்ரர், ம. அன்ரனி 2-3-ம் இடங்களையும், கா. மு. றயூமுதீன் 4-ம் இடத்தையும், ஆவரங்கால் சரஸ்வதி சனசமூக நிலையத்தைச் சேர்ந்த மா. தாமோதரம் பிள்ளை 5-ம் இடத்தையும் பெற்றனர். உள்ளூர்ப் போட்டியில் செ. கணேசலிங்கம் முதலாவது இடத்தைப்பெற்றார். மற்றும் பொ. நல்லதுரை, பொ. பத்மநாதன், செ. அமிர்தலிங்கம், க. வரதராசன், இ புஸ்பகாந்தன் [வயசு 11] ஆகியோர் முறையே இரண்டாம் மூன்றும் நான்காம், ஐந்தாம் இடங்களையும் பெற்றனர்.

மேற்படிநிலையத்தின் வடமாகாண 25 மைல் சாதாரண சைக்கிள் ஓட்டப் போட்டி எதிர்வரும் 24-ம் திகதி காலை 6 மணிக்கு ஆரம்பமாகவிருக்கிறது.

# புத்தாண்டு விழா போட்டி முடிவுகள்

— நமது நிருபர்கள் —

உடுப்பிட்டி, செவ்வாய் உடுப்பிட்டி எம். பி. திரு. மு. சிவசிதம்பரம் தலைமையில் நான்கு தினங்களாக நடைபெற்ற புதுவருடக் களியாட்ட விழாவில் உடுப்பிட்டி வாலிப முன்னணி நடாத்திய உப-உணவுப் பயிர்செய்கைப் போட்டியில் பரிசுபெற்ரோர் விபரம் வருமாறு -

(மிளகாய்) கம்பர்மலை வாசிகள் வ. கதிர்காமத்தம்பி, பா. செல்லையா, சி. நடேசு [கரவெட்டி]. வாழை: க. மாணிக்கம் [வதிரி], வீ. அபயலிங்கம் [இமையாணன்], சு. கணபதிப்பிள்ளை [கப்பூது]. கத்தரி: க. வேலுப்பிள்ளை, ச. ஆறுமுகம், வே. கந்தன். மரவள்ளி: பி. பழனிப்பிள்ளை, சீ. ஏ. சின்னத்துரை, க. சந்திரசேகரம். வெண்டி: கு. குலவீரசிங்கம், ச. கணேசதாஸ். கூடுதலான செய்கைப் போட்டியில் வதிரியைச் சேர்ந்த க. மாணிக்கம் விவசாய மணியாகத் தெரிவு செய்யப்பட்டார். அ. சா. இரத்தினம் [கரவெட்டிமேற்கு] இரண்டாவதாகவும், ஜே. எஸ். நல்லதம்பி [அல்வாய் தெற்கு] மூன்ருவதாகவும் தெரிவு செய்யப்பட்டனர்.

இவர்களுக்கு தேசிய சேவை, விளையாட்டுத்துறை அமைச்சர் திரு. வீ. ஏ. சுகததாஸாவின் துணைவியார் திருமதி சுகததாஸா பரிசுகள் வழங்கினர்.

### தீவுப்பகுதியில்

ஊர்காவற்றுறை, செவ். தீவுப்பகுதிப் பொலிசாரால் ஒழுங்குசெய்யப்பட்ட புத்தாண்டு விளையாட்டுப் போட்டிகள் சிறப்பாகநடைபெற்றன.

சறுக்குமரம் ஏறும் போட்டியில் சரவணைக் கிராமத்தைச் சேர்ந்த இளம் வீரர் கே இராசையா சறுக்குமரத்தில் ஏறிப் பச்சைக்கொடியைத் தரைக்குக் கொண்டு வந்துசேர்ந்தார். இவரின் சாதனையைப் பலரும் பாராட்டினர். கயிறு இழுத்தல் போட்டியில் புளியங்கூடல் மகாமாரி சனசமூக நிலையக்கோஷ்டி வெற்றி பெற்றது.

ஊர்காவற்றுறைபொலிஸ் உத்தியோகஸ்தர்களுக்கும், தீவுப்பகுதிக் காரியாதிகாரி பிரிவினருக்குமிடையே நடைபெற்ற கயிறுஇழுத்தலில் பொலிஸ் கோஷ்டி வெற்றிபெற்றது.

மாட்டுவண்டி சவாரிப் போட்டியில் தீவுப்பகுயைச் சேர்ந்த எட்டுக்சோடி காளைகள் போட்டியில் ஈடுபட்டன. போட்டிமுடிவு வருமாறு:- எம். கந்தையா [நாரந்தனை], என். சோமசுந்தரம் [புளியங்கூடல்], வி. சதாசிவம் [புளியங்கூடல்.]

சைக்கிள் ஓட்டம்: வே. கந்தலிங்கம், ரி. சங்கரராஜா, சு. செல்வராசன்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## வயோதிபர் மோதுண்டார்

முல்லைத்தீவு, செவ்.

தண்ணீரூற்று முள்ளியவளை ஐக்கிய விளையாட்டுக் கழகத்தினரால் நடாத்தப்பட்ட மாட்டுவண்டிச்சவாரிப் போட்டியைப் பார்த்து ரசித்தஒரு வயோதிபர் போட்டியில் பங்குபற்றி வேகமாகவந்த வண்டியுடன் மோதுண்டு பலத்தகாயத்திற்காளாகினுர். உடனேமுல்லைத்தீவு ஆஸ்பத்திரிக்குப் பொலிஸார் கொண்டு சென்று அனுமதித்தனர். நிலைமை மோசமானதுகண்டு யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரிக்கு அம்புலன்ஸ்மூலம் அவ் வயோதிபர் அனுப்பி வைக்கப்பட்டார்.

## பஸ்சேவை சீர்கேடு

காரைநகர், செவ்வாய்

காரைநகர் பஸ்சேவை சீர்கேடான நிலையிலுள்ளது. சில வேளைகளில் மணித்தியாலக்கணக்காக கடும்வெய்யிலில் காய்ந்தவண்ணம் பிரயாணிகள் நிற்கவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.


**நியூ காலிங்கன்**
[இணுவில்]
தினசரி 6-30, 9-30 மணி
விடுமுறைதினங்களில் 2-30
எஸ்.எஸ்.ஆர்-விஜயகுமாரி நடித்த
**காக்கும் கரங்கள்**

**ராஜா RAJAH**
யாழ்ப்பாணம் JAFFNA
தினசரி 2-30, 6-30, 9-45
போயாதினங்களில் 4காட்சிகள்
எஸ்.எஸ்.ஆர் -விஜயகுமாரி நடித்த
**ஆனந்தி**

**மனோஹரா**
[யாழ்ப்பாணம்]
தினசரி 2 காட்சிகள்
போயா தினங்களில் 3 காட்சிகள்
எம்.கே.ராதா-புஷ்பவல்லி நடித்த
**சம்சாரம்**

**REGAL - JAFFNA**
William Holden
Susannah york
in
**THE 7th DAWN**
Time: 4-15, 7-00 9-45 p. m.


# விசேஷ ஆணையாளர் . . . .

[2-ம் பக்கத் தொடர்ச்சி]

ளர்கள் வற்புறுத்தினுர்களா? சுப்பிறீம் கோட் செலவும், அப்புக்காத்து -- பிரக்கிராசிமார் செலவும், ரூபா 10,000-00க்கு மேல் இருக்கும். இதுதவிர பிரிவி கவுன்ஸில் வழக்குச் செலவாகப் பணம் அனுப்புவதற்கு 10,000-00 ரூபாவுக்கு மேற்பட்ட தொகைக்கு அந்நியச் செலாவணி கோரி விசேட ஆணையாளர்கள் விண்ணப்பித்துள்ளார்கள். இது தவிர பணம் மேலும் செலுத்த வேண்டியுள்ளது. விசேட ஆணையாளர்களின் போக்குவரத்துச் செலவு, பட்டா, படி எல்லாம் சேர்த்து கிட்டத்தட்ட ரூபா 50,000-00-க்கு வரும். இதனை விசேட ஆணையாளர்கள் மறுக்க முடியுமா?

### சந்தை அமைப்பு

அரசாங்க ரவுண் பிளானர் வரைந்தது, ஒரு பொதுப் படமாகும். இதற்காக விபரப் படங்கள் தயாரிக்சப்படவில்லை. இப்படங்கள் தகுதியும் திறமையும் கொண்ட கட்டிடக் கலைஞர்களாலேயே தயாரிக்கப்பட வேண்டும். சிவில் இன்ஜினியர்கள் இதைத் தயாரிக்கமுடியுமா? எல்லாமாக மூன்று படங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன. இந்த மூன்று படங்களில் எந்தப்படத்தைத் தெரிவு செய்வது என்பது மக்களைச் சார்ந்ததாகும். மக்கள்தான் தங்களுக்குத் தேவையான சந்தைக்குரிய படத்தை தெரிவுசெய்ய வேண்டும் மக்களின் வாக்குகளால் தெரிவுசெய்யப்பட்ட பிரதிநிதிகளே இதனைத் தெரிவுசெய்ய வேண்டும். விஷேடஆணையாளர்கள் இதனைத்தெரிவுசெய்வதற்கு எந்தவித அதிகாரமும் கிடையாது.

மாதிரிச்சந்தைக்கான விபரப் படங்கள் கொன்ஸ்றக்ஷனல் இன்ஜினியர்களால் செய்யப்பட வேண்டும். இதைவிட்டுசம்பளம்பெறும் சபை ஊழியர்களைக் கொண்டு தயாரிக்கும் படம் படமாக அமையாது. அது மக்களுக்கு ஒரு பாடமாகவே இருக்கும். மாதிரிச் சந்தைக்கு ரூபா 35 லட்சம் பணம் பெறப்படுவதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. இதனை எப்படித் திருப்பிக்கட்டுவது. வட்டியையும் சேர்த்தால் கடன் எப்படி கட்டிமுடிக்கமுடியும். வருடமொன்றுக்கு ரேட்டு. ஒழுங்கை முதலியவற்றின் பராமரிப்புச் செலவு ஒருலட்சம் ரூபாவாகும். இதற்கே கஷ்டப்படும் சபை, 35 லட்சத்திற்கு எங்கே போவது? இந்தச் சந்தைக்கான கடனைத் தருவதற்கு இப்போது மந்திரி என்ன சொல்கின்றுர். இதனை நாம்அறிய விரும்புகின்றோம்.

நாம் போட்ட திட்டப்படி புதிய சந்தைக்கட்டிடச் செலவு 5 லட்சம் ரூபாவாகும். முதலில் ஓர்கட்டடத்தைக் கட்டிய பின்னர், அதன் வாடகை, உரிமைப் பணம், முற்பணம் முதலியவற்றைக் கொண்டு 2-ம்கட்டடத்தையும் கட்டி முடிப்பதே எங்களது திட்டம். இதனுல் சபை கடனுளியாக வேண்டிய நிலை ஏற்படாது. விசேட ஆணையாளர் திட்டப்படி நாம் கஷ்டமடைய வேண்டிய நிலைதான் ஏற்படும். இதன் காரணமாகத்தான் பொதுமக்களின் வரியையும் 15 வீதம் ஆகக்கூட்ட விசேட ஆணையாளர்கள் எத்தனித்தார்கள் என்பதையும் நாம் மறந்துவிடக்கூடாது.

### வீதி அமைப்பில் கல்லும் மண்ணும்

யாழ்ப்பாணத்தில் கிடைப்பது ஒரே ரகமான கல்லும், மண்ணும் என்று கூறப்பட்டுள்ளது. இது சுத்தப் பொய். 3 விதமான கல்லுகள் யாழ்ப்பாணத்தில் கிடைக்கின்றன. 1 அடி கல்லு 2 கிளறு சல்லி 3 கிறசர் கல்லு. மராமத்துப் பகுதியினர் அடி கல்லுக்குக் கேள்விகளைக் கோரிவிட்டு கிளறு சல்லிகளை அடிகல்லு என்று ஒப்புக்கொண்டுள்ளனர். இதுவே தான் இப்போது வீதிகளில் குவிக்கப்பட்டுள்ளது. அடிகல்லிலும் பார்க்க கிளறு சல்லி கியூப் ஒன்றுக்கு ரூபா 7 குறைவாகும். இதனை நாம் மறந்துவிடக்கூடாது. இதனுல் 17 வட்டாரங்களுக்கும் தேவைப்படும் கல்லின் பெறுமதி ரூபா 60000க்கு கிட்ட வரும். கிளறு சல்லியை ஏற்றுக்கொள்வதால் ரூபா 12000 ஆதாயம். இப்பணத்தை ஒப்பந்தக்காரரும், இதற்குப் பொறுப்பாகவுள்ள உத்தியோகத்தர்களும் ஏப்பம் விடுகிருர்கள். இதனை 20-2-67ல் நடந்த ஆணைக்கிழுவிடம் முறையிட்டோம். பலன் ஒன்றும் இல்லை. பணம் பாழடிக்கப்படுகிறது.

சபை இருந்த காலத்தில் கல்லுகள் பற்றிய விபரத்தைக் காட்டும் ஓர் பதிவேடு மராமத்துப் பகுதியில் பாவிக்கப்பட்டு வந்தது. இதில் எந்த வீதியில், எந்த ஒழுங்கையில் எவ்வளவு கியூப் கல்லுகள் பறிக்கப்பட்டன என்பதையும், பாவிக்கப்பட்ட கல்லுகள் எவ்வளவு என்பதையும், மிச்சமாக எவ்வளவு கல்லுகள் என்பதையும் காணக்கூடியதாக இருந்தது. ஆனுல் இன்றோ இந்தப் பதிவேடுபாவிக்கப்படுவதில்லை. விசேஷ ஆணையாளர்கள் ஆட்சிக்கு வந்த காலத்தில் இருந்து இது பராமரிக்கப்படுவதில்லை. ஏன்? இதனைப் பராமரிக்கக்கூடாதென்று விசேட ஆணையாளர்கள் கட்டளையிட்டார்களா? மராமத்துப் பகுதியின் களவுகளில் சிலவற்றைப் பிடிப்பதற்கு ஆதாரமாக இருந்த இந்த பதிவேடு ஏன் பராமரிக்கப்படுவதில்லை? பதிவேடு மாயமாய் மறைந்துவிட்டதா? இதன் மர்மம் தான் என்ன?

குழாய் நீர் வசதிகள் பொதுமக்களுக்கு அளிக்கப்பட்டு வந்தன. இவ்வசதி ஏன் நிறுத்தப்பட்டது? புதி[illegible] [illegible] விண்ணப்பித்தவர்கட்கு ஏன் தண்ணீர் வசதி வழகப்படவில்லை? ஆனுல் விசேட ஆணையாளர்களின் நண்பர்கள் நால்வருக்கு இத்தண்ணீர் வசதி வழங்கப்பட்டுள்ளது. ஏன்? பாரபட்சம் ஏன் காட்டப்பட்டது? வேண்டுமென்றுல் நல்வரின் பெரையும் குறிப்பிட ஆயத்தமாக உள்ளோம்.

விசேட ஆணையாளர்களே! வரியிறுப்பாளர்கள் சிலர் 4-4-67ல் குறிப்பிட்ட முக்கிய பிரச்னையை ஏன் மறைத்துவிட்டீர்கள். கனகரத்தினம்ரேட்டில் கட்டிய உப மின்சார நிலையம் உடைந்ததையும், பிரப்பங்குளம் சுவர் இடிந்ததையும் மறந்தா போனீர்கள். மேற்பார்வை செய்யாத காரணத்தாலும், திறமையற்ற வேலை காரணமாகவும் சபைக்கு 10,000 ரூபா அளவில் நட்டம் ஏற்பட்டதை மறக்க முடியுமா? சபை இருந்திருந்தால் இவ்விஷயம் சம்பந்தப்பட்டவர்களுக்கு எதிராக ஒழுங்கு நடவடிக்கை எடுத்திருக்கும். ஆனுல் விசேட ஆணையாளர்கள் என்ன நடவடிக்கை எடுத்தார்கள்? வரியிறுப்பாளர்களின் வரிப் பணம் இப்படித்தான் கிதைவுறுவதா?

நூல்நிலைய கோபுரக்கட்டடம், கண்ட கல்லுகளைக் கொண்டு அலுவலக மூலமாகக் கட்டப்பட்டு வருகின்றது. இதற்குரிய செலவு எவ்வளவு? மராமத்துப் பகுதியின் மதிப்பீட்டுப்படி கியூப் ஒன்று ரூபா 140 வீதம் வேலை செய்யப்படவேண்டும். ஆனுல் கேள்விகள் கோரிய சமயத்தில் இதனைப் பொறுப்பேற்பதற்கு எவராவது முன்வரவில்லை. இதனை அலுவலகமூலம் செய்கின்றுர்கள், நாட்சம்பளக கூலியாட்களை வைத்து வேலை நடைபெறுகிறது. இதனுல் ஏற்படும் செலவு மராமத்துப் பகுதி மதிப்பிட்ட செலவைவிட 2 மடங்காகும். இவர்களது வேலையின்படி கியூப் ஒன்று ரூபா 250 முடியும். இது வீண் செலவு. ரூபா 50000 அளவில் சபைக்கு நட்டம் ஏற்படும் என்று திடமாகக் கூறலாம். இந்த வீண் செலவு எதற்காக?

மக்களின் ஆட்சிக்காலத்தில் தான் விசேட ஆணையாளர்களின் நிர்வாகத்திறன், விரயமாக்கப்பட்ட பணச்செலவு முதலியவற்றை அறியமுடியும்.

மாஜி உறுப்பினர்கள்
க. வீ. தெய்வேந்திரம்,
தா. ச. துரைராஜா,
தம்பு கந்தையா,
அ. நடராசா

## நாட்டிலும் நகரிலும்

[2-ம் பக்கத் தொடர்ச்சி]

கட்டியவிழ்க்கப் போகும் கணவன் மாருக்கு 'யானையைக் கட்டி தீனி போடுவது' போலிருக்குமல்லவா.?

இங்கிலாந்தின் வட பகுதியில் வருடா வருடம் ஒரு வேடிக்கையான போட்டி நடக்கிறது. இதில் பங்குபற்றுவது முழுக்க முழுக்க ஆண்களே. பெண்கள் அந்தப் பக்கமே எட்டிப் பார்ப்பதில்லை. ஏனென்றுல், இந்தப் போட்டியில் முகத்தை மிகவும் விகாரமாக வைத்துக் கொள்பவருக்குத் தான் மகுடம் கிடைக்கும். இயற்கையாகவே விகார ரூபமுள்ளவர்களுக்கு நல்ல வாய்ப்பு. முகத்தை எந்தவிதமான கோர ரூபத்திலும் கோணி வைத்துக் கொள்ளலாம். ஆனுல் அப்படி செய்வதற்கு கைகளை உபயோகிக்கலாகாது. வெற்றி பெறுபவருக்கு 'மிஸ்டர் விகார மூஞ்சி' என்று பட்டம் சூட்டப்படும்.

—வழிப்போக்கன்


**4-வது வெற்றி வாரம்**

| | | |
|---|---|---|
| கெப்பிட்டல் [கொழும்பு] | பிளாஸா [வெள்ளவத்தை] | நவா [கொம்பனித்தெரு] |
| வெம்பிளி [கண்டி] | மொடேன் [பதுளை] | நியூசினிமா [குருணுகலை] |
| விஜயா [மட்டக்களப்பு] | தீவொளி ]நுவரெலியா] | ஸ்ரீகிருஷ்ணு [திருமலை] |

கிங்ஸ்லி [கொழும்பு]
வெலிங்டன் [யாழ்ப்பாணம்]

சோதனைச் சுழலிலே சோதரர் இருவர்!
வேதனை விளிம்பிலே மாதர்கள் இருவர்!!
ஆண்டவனுக்கு சவால்விட்டான் ஒருவன்!
அண்ணனையே தடுமாறவைத்தான் ஒருவன்!!
கள்வனைக் காதலித்தாள் ஒருவள்!!

ஜெய்சங்கர் — எல். விஜயலக்ஷ்மி
மனோகர், அசோகன், வசந்தா,
தங்கவேலு, மனோரமா, கருணாநிதி
மற்றும் பலர் நடிக்கும்

**இரு வல்லவர்கள்**


## வரிவிளம்பரம்

### விற்பனைக்கு

வீடும், வளவும்

ஊர்காவற்றுறை பட்டின சபை எல்லைக்குள் தபால் நிலையம், பள்ளிக்கூடம், வைத்தியசாலை, D.R.O. கந்தோர் முதலியவற்றுக்கு அண்மையில் உள்ள வீடும் வளவும் விற்பனைக்குண்டு. M. S. நடராசா, 23, பெயர்லைன்ரேட், தெஹிவளையில் விசாரிக்கவும். 1919

வீடும் வளவும்

யாழ்ப்பாணம் இல. 20, கண்டி வீதியிலுள்ள 3 பரப்பு 1 குழியும் விஸ்தீரணமுள்ள காணியும் நாலு படுக்கை அறைகள், ஸ்ரோஸ், வேலைக்காரர் அறை, சமையலறை, மின்சாரம், தண்ணீர்வசதி, வடிகால் முதலிய வசதிகளுடன் கூடிய வீடும் விற்பனைக்குண்டு. கூடிய விலைகேட்பவர்களது விண்ணப்பம் கவனிக்கப்படும். விபரங்கட்கு B. S. ஜோசேப் சிலோன் மேச்சன்ற்ஸ் லிமிட்டெட், ஆஸ்பத்திரிவீதி, யாழ்ப்பாணம். 1697

காணி

முழு வீட்டுடன் சேர்ந்த காணி பரப்பு 3 1/2 விற்பனைக்கு உண்டு. விலாசம் நம். 26, 2-ம் குறுக்கு வீதி, யாழ்ப்பாணம். விப்ரங்கட்கு W. சூசைப்பிள்ளை, நம். 103, 16-வது ஒழுங்கை, காலேஜ் வீதி, கொழும்பு-13. தொடர்பு கொள்ளவும். 1917

### தேவை

மணமகன்

12-ல் செவ்வாய்க்குப் பொருத்தமான 22—30 வயதுக்குட்பட்ட மணமகன் சிறந்த சைவவேளாள குலத்தில் தேவை. விளம்பர இல. 1908, 'ஈழநாடு' மே/பா., யாழ்ப்பாணம் என்ற விலாசத்துக்கு எழுத்து மூலம் சகல விபரங்களுடன் விண்ணப்பிக்கவும். 1908

### வாடகைக்கு

வீடு

''மங்கலமனை'' ஆனைக்கோட்டை, 4 படுக்கை அறைகள் தொலைபேசியுடன். மானிப்பாய் ரோட், நவாலிரேட் சந்தி அருகாமையில் மேமாதம் 1-ம் திகதியிலிருந்து வாடகைக்கு விடப்படும். ஆறுமுகம், தொலைபேசி, மானிப்பாய். 523. 1918

மன்னார்

## கொலை முயற்சி வழக்கு

யாழ்ப்பாணம், புதன்

மன்னார் கொலை முயற்சி வழக்கு நேற்றுக்காலை வட பகுதி அசைஸ் நீதிமன்றத்தில் நீதியரசர் வி. தென்னக்கோன் முன்னிலையில் ஆரம்பமானது.

இவ்வழக்கில் மன்னாரைச் சேர்ந்த எம். மார்க்கண்டு, சி. அருளம்பலம் ஆகிய இருவரும், கந்தப்பு, முருகேசு ஆகியோரைக் கொலை செய்ய முயற்சித்ததாகக் குற்றஞ்சாட்டப்பட்டிருந்தது.

எதிரிகள் சார்பில் அட்வகேட் கே. வி. எஸ். சண்முகநாதன், அட்வகேட் எஸ். ஸ்ரீநிவாசன் உதவியுடனும், புறக்டர் ச. லோகேஸ்வரனின் உதவியுடனும் ஆஜரானுர். முடிக்குரியதரப்பில் அட்வக்கேட் திஸா பண்டாரநாயக்கா ஆஜரானுர்.

அரசாங்க ரசாயன பரிசோதகரை இவ்வழக்கில் சாட்சியாக அழைக்க சந்தர்ப்பமளிக்க வேண்டுமென்று எதிரிகளின் வழக்கறிஞர் கேட்டுக் கொண்டதைத் தொடர்ந்து நீதியரசர் இவ்விசாரணையை மேமாதம் 11-ம் திகதிக்கு ஒத்திவைத்தார்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# ஆயுதம் தாங்கிய கோஷ்டி தாக்கியதாம்

## ஒருவர் படுகாயங்களுடன் ஆஸ்பத்திரியில்

உடுப்பிட்டி, செவ்வாய்.

வீதியால் சென்றுகொண்டிருந்த இருவரை ஆயுதம் தாங்கிய கோஷ்டியொன்று தாக்கியதில் ஒருவர்படுகாயங்களுடன் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப் பட்டுள்ளார்.

கரணவாய் தெற்கு முதலைக்குழி என்னுமிடத்தைச் சேர்ந்த ஆசிரியரான எஸ். குகராசன்என்பவரும், அரசங்கலிகிதரான கே. வல்லிபுரம் என்பவரும் நேற்றுமுன்தினம் காலை சைக்கிளில் தூதாவளை வீதிவழியாகச் சென்றுகொண்டிருக்கையில் திடீரென்று ஆயுதம் தாங்கிய கோஷ்டியொன்று இருவரையும் எவ்வித காரணமுமின்றித்தாக்கியதில் ஆசிரியரான எஸ். குகராசன். [வயது21 ] மண்டையில் படுகாயங்களுடன் மந்திகை அரசினர் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப் பட்டுள்ளார். பொலிசார் புலன் விசாரணை செய்துவருகின்றனர்.

# கல்முனை மோதல் பற்றி விசாரணை

கொழும்பு, செவ்.

கடந்த வார இறுதியில் கல்முனையில் நடைபெற்ற மோதல் ஒன்றையிட்டு விசாரணை செய்ய, தென் பகுதி உதவி இன்ஸ்பெக்டர் ஜெனரல் திரு. ஏ. ஸி. டெப் இன்று கல்முனைக்கு விமான மூலம் சென்றுர்.

கல்முனைக் கடற்கரையோரமாகவுள்ள முடிக்குரிய காணியில் முஸ்லிம் சமூகத்தைச் சேர்ந்தவர்கள் சிலர் அத்துமீறிப் பிரவேசித்ததைத் தொடர்ந்து ஏற்பட்ட கைகலப்பில் ஒருவர் இறந்ததாகவும், எழுவர் படுகாயமுற்றதாகவும் சொல்லப்படுகிறது.

வீடுகள் தீக்கிரையாக்கப்பட்டு, வீதியில் காரில் பிரயாணம் செய்தவர்கள் தாக்கப்பட்டதாகவும் பொலிஸ் அறிக்கைகள் கூறுகின்றன. பொலிசார் 30 பேரைக் கைது செய்துள்ளனர்.

அம்பாறை ஏ. எஸ். பி. சம்பவம் நடைபெற்ற இடத்துக்கு மேலதிக பொலிஸ் கோஷ்டி ஒன்றை அனுப்பி வைத்தார். கல்முனைப் பட்டினத்தில் பொலிஸார் தீவிர ரோந்து சுற்றி வருகின்றனர்.

கொழும்பிலிருந்தும் பொலிஸ் கோஷ்டி அனுப்பப்பட்டுள்ளதாகவும், நிலைமை இப்போது கட்டுக்கடங்கியுள்ளதாகவும் புதிய ஐ. ஜி. பி. திரு. எலெரிக் அபேகுணவர்த்தன தெரிவித்தார்.

உதவி பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரல் [தென் பகுதி] திரு. ஏ. ஸி. டெப், பொலிஸ் பாரபட்சம் பற்றிச் செய்யப்பட்டுள்ள புகார்களை விசாரிப்பார். மோதலில் ஈடுபட்ட இரு கோஷ்டிகளிடையேயும் நல்லுறவை ஏற்படுத்த திரு. டெப்புடன் கூடவே மட்டக்களப்பு, அம்மாறை அரசாசாங்க அதிபர்களும் முயற்சி செய்வார்களெனத் தெரிகிறது.

# மனைவிக்கு வெட்டுக்காயம்; கணவன் தற்கொலை

## சாவகச்சேரியில் சம்பவம்

சாவகச்சேரி, செவ்.

மனைவியைக் கத்தியால் வெட்டிய கணவர் தாம் நஞ்சு அருந்தி மரணமான சம்பவமொன்று கடந்த இரவு சாவகச்சேரியைச் சேர்ந்த கல்வயல் என்னுமிடத்தில் நிகழ்ந்துள்ளது.

வெட்டுக் காயங்களுக்குள்ளான எட்டுப்பிள்ளைகளின் தாயான செல்லையா என்பவரது மனைவியான ராசம்மா தற்போது அபாயகரமான நிலையில் யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப் பட்டுள்ளார்.

இக் கத்திவெட்டுச்சம்பந்தமாக இப்பெண்ணின் கணவரான விஞசித்தம்பி செல்லையாவை பொலிசார் கைது செய்வதற்காக தேடிச் சென்றபோது இவர் 'பொலிடோல்' அருந்தி மரணமடைந்து விட்டாரென அறிவிக்கப்பட்டதாம்.

காலஞ்சென்ற செல்லையா தனதுமனைவியைக்கத்தியால் வெட்டிய தாகவும் பின்னர் ஓடிச்சென்று அருகேயுள்ள வயல் வெளியில் 'பொலிடோல்' அருந்தி மரணமானதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவரது மரணம் சம்பந்தமாக மரண விசாரணை நடத்திய சாவகச்சேரிப்பகுதி திடீர் மரண விசாரணை அதிகாரி திரு. எஸ். கே திரவியநாயகம் தற்கொலையெனத் தீர்ப்பளித்தார்.

இறந்தவரது பிள்ளைகள் சாட்சியமளிக்கையில் தமது தாயாரைக் கத்தியால் வெட்டியபின் தந்தை 'பொலிடோல்' குடித்து மரணமானரெனத் தெரிவித்தார்கள்.

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேலை வீதி 63-ம் இல்லத்திலுள்ள அவர்களது அச்சகத்தில்1967-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 19-ம்திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

## கலைஞருக்கு கௌரவம்



சென்ற முப்பத்தைந்து ஆண்டுகளாக இலங்கையில் நடனம், நாடகம் மற்றும்பல துறைகளில் கலைப்பணி புரிந்துவரும் நல்லூர் திரு சி. மு. சோமசுந்தரத்துக்கு இன்று மாலை அரசடிப்பிள்ளையார் சோவில் வீதியில் நடைபெறும் யாழ்ப்பாண ரஸிக ரஞ்சனசபா இசை விழாவில் பொன்னுடை போர்த்திக் கௌரவிக்கப் படவிருக்கிறது. 'ஆர்மோனியம் சோமு' என்றுல் இலங்கையில் தெரியாதவர்கள் அதிகமானேர் இருக்கமாட்டார்கள். சிறந்த பாடகருமான திரு. சோமசுந்தரம் முப்பது ஆண்டுகளுக்குமுன் இலங்கைக்குவந்த பிரபல இந்திய நடிகர்களாலும் பாடகர்களாலும் பாராட்டப்பெற்றவராவர்.

## கி.பாகிஸ்தானில் வாந்தி அம்மை

### 100பேர் பலி

கராச்சி, ஏப்ரல்18

கிழக்கு பாகிஸ்தானில் கடந்த மூன்று மாதங்களில் வாந்தி, அம்மை நோய்களினுல் 100பேர் மாண்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

## 'கடனுதவி தருக'

ஊர்காவற்றுறை, செவ்.

ஊர்காவற்றுறை பட்டின சபைக்கு நிரந்தர கட்டடம் அமைப்பதற்கு கடன் சீர்திருத்த நிதியில் இருந்து 7500 ரூபா கடனுதவி தருமாறு ஊர்காவற்றுறைப் பட்டினசபை உள்ளூராட்சி ஆணையாளரைக் கேட்டுள்ளது.

தீவுப்பகுதியில் இயங்கும் ஸ்தலதாபனங்களில் பட்டினசபை அந்தஸ்துடைய பெரிய ஸ்தாபனம் ஊர்காவற்றுறைப் பட்டினசபையாக இருந்தும் இதற்கென ஓர் நிரந்தர மண்டபம் அமைக்கப்படாது இருப்பது பற்றி பொதுமக்கள் புகார் தெரிவித்துள்ளனர்.

## "நிரந்தரமான நியமனம்இல்லை"

ஊர்காவற்றுறை, செவ்.

தீவுப்பகுதியின் பெரிய ஆஸ்பத்திரியான ஊர்காவற்றுறை அரசினர் வைத்தியசாலையில் மருந்து கலக்கும் ஊழியர் எவரும் நிரந்தரமாக நியமிக்கப்படவில்லை. இடமாற்றம் நடைபெற்ற இந்த ஊழியருக்குப் பதில் தற்காலீகமாக ஒருவர் நியமிக்கப் பட்டுள்ளார், இரு ஊழியர்கள் கடமையாற்றிய இடத்திற்குத் தற்போது ஒரு ஊழியரே தற்காலிகமாகக் கடமைபுரிந்து வருகிருர்.

ஊர்காவற்றுறை ஆஸ்பத்திரியில் தற்போது வெளிநோயாளர் தொகை அதிகரிப்பதால் மருந்து கலக்கும் இரு ஊழியரை நியமிக்க வேண்டுமெனப் பொது மக்கள் கேட்கிருர்கள்.

## 'முன்னேற்றத்திற்கு விளையாட்டு அவசியம்'

யாழ்ப்பாணம், புதன்.

மனிதனின் முன்னேற்றத்திற்கு கலை விளையாட்டு பொருளாதாரம் இன்றியமையாதது. நூல்நிலையங்கள் நாடக, பேச்சுப் போட்டிகள் ஆகியவற்றை ஊக்குவிப்பதினுல் நாம் கலையைவளர்க்கின்ருேம். உடல் போட்டிகளினுல் விளையாட்டுக்களை ஊக்குவிக்கிருேம், ஆனுல் இதனை நிறைவுறச் செய்ய விளையாட்டு மைதானம் கிராமங்கள் தோறும் இருக்கவேண்டும்,' என்று யூனியன் கிளப்தலைவர் திரு. எஸ் சூசைப்பிள்ளை மகாஜன சனசமூக நிலைய 16வது ஆண்டுவிழாவில் பேசும் பொழுது குறிப்பிட்டார்.

''உணவு உற்பத்திக்குக் கட்டாக்காலி ஆடுமாடுகள் மிகவும் தடையாயிருந்து வருகின்றன. இவற்றை நாம் தடைசெய்யவேண்டும். அத்துடன் கட்டாக்கா[illegible] மாடுகளை வைத்திருப்பவர்களை நாம் சமூகத்துரோகிகள் என்றே கூறவேண்டும்'' என்று வலிமேற்கு காரியா[illegible] நடராசா பேசுகையில் கூறினுர்.

# பஸ் கட்டணங்கள் குறைக்கப்படும்

## பொதுப்பணி மந்திரி கருணாநிதி தகவல்

சென்னை, ஏப்ரல் 18

சென்னைநகரில் பஸ் கட்டணங்களைக் குறைப்பதுபற்றி அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமென பொதுப்பணித்துறை மந்திரி திரு. மு. கருணாநிதி இங்குதெரிவித்தார்.

புதிய பஸ்கட்டணங்கள் பற்றிச் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் ஆலோசனை நடத்தியபின்னரே இறுதி முடிவு எடுக்கப்படுமென அவர் மேலும் கூறினுர்.

மதுவிலக்கு பற்றிக் குறிப்பிடுகையில், அதுதொடர்ந்திருக்குமென்றும், ஆனுல் நல்லமுறையில் அமுல் நடத்தப்படுமென்றும் திரு. கருணாநிதி குறிப்பிட்டார்.

### புங்குடுதீவில்

# சிறுபான்மைத் தமிழர் ஆலயப் பிரவேசம

புங்குடுதீவு, செவ்

புங்குடுதீவு கிழக்கு ஸ்ரீ கண்ணகை அம்மன்கோயில் என வழங்கப்படும் ஸ்ரீ ராஜராஜேஸ்வரி அம்பாள் ஆலயம் சடந்த 17ந் தேதி சிறுபான்மைத் தமிழர்கள் வழிபடுவதற்காகத் திறந்து விடப்பட்டது.

அன்றைய தினம் காலை 9 மணியளவில் சிறுபான்மைத் தமிழ்மக்கள் 'பண்ணின் நேர்மொழி' என்ற தேவாரத்தைப் பாடியபடி ஆலயப்பிரவேசம் செய்தனர். அன்றிரவு திருப்பூங்குடி திரு. வி. க. ஆறுமுகம் கோஷ்டியினரின் 'பசத நந்தனர்' என்னும் வில்லிசை நிகழ்ச்சி இடம்பெற்றது. புங்குடுதீவிலுள்ள மிகப் பழமைவாய்ந்த கோயில்களில் இதுவுமொன்று.

கோவில் பஞ்சாயம், நிருவாகச்சபை ஆகியவற்றின் ஆலோசனைப்படி இம்மாதம் 15ந் தேதி நடைபெற்ற விசேஷ மகாசபைக் கூட்டத்தில் மக்கள் எல்லோரும் ஆலயத்துள் சென்று வழிபட இடமளிக்கவேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டது. அத்தீர்மானத்தின் படியே 17ந்தேதி அம்பாளை சிறுபான்மைத் தமிழர் தரிசிக்க இடமளிக்கப்பட்டது.

## ஏப்ரகாம் 84 ஓட்டங்களை எடுத்தார்

யாழ்ப்பாணம், புதன்

வடமாகாணப் பாடசாலை தெரிவுக்கோஷ்டிக்கும்தென் மாகாணப் பாடசாலை தெரிவுக் கோஷ்டிக்குமிடையில் நேற்றுயாழ். மத்தியகல்லூரி மைதானத்தில் நடைபெற்ற கிரிக்கெட் போட்டியில், முதலில் துடுப்பெடுத்தாடிய வடமாகாணக் கோஷ்டியில் ஏபிரகாம் ஆட்டமிழக்கும் போது 84 ஓட்டங்களையும், ஜெகதீசன் ஆட்டமிழக்கும் போது 42 ஓட்டங்களையும் எடுத்திருந்தனர். இதன் பின்துடுப்பெடுத்தாடிய விபுலானந்தமூர்த்தி 38 ஓட்டங்களை எடுத்து ஆட்டமிழந்தார். ஈற்றில் வடமாகாணக்கோஷ்டி சகல விக்கட்டுகளையும் இழந்து மொத்தம் 242 ஓட்டங்களைப்பெற்றது.

இதன்பின் துடுப்பெடுத்தாடிய தென்மாகாணக் கோஷ்டி இன்றைய ஆட்டம் முடியும்போது ஆறுவிக்கட்டுகளை இழந்து மொத்தம் 100 ஓட்டங்களை எடுத்திருந்தது. ஆட்டமிழக்காமல் மெருண்டா 36 ஓட்டங்களையும் ஆரம்பவோட்டு 5 ஓட்டங்களையும் எடுத்தனர். இவர்கள்இன்றுதொடர்ந்து ஆடுவார்கள்.

## அரசாங்க....

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

ஏற்படுத்தலாம். உங்கள் அப்புக்காத்துவிற்கு அரசாங்கச் செலவில் நியமிக்கப்படும் அப்புக்காத்து உதவியாக இருப்பார்? உங்களுக்கு விருப்பமா?

எதிரிகள்- விருப்பம். அப்படியானுல் அரசாங்க செலவில் அப்புக்காத்து வையுங்கள்,

நீதியரசர்- இவ்வளவு நாட்களும் ஏன் உங்கள் செலவில் அப்புக் காத்து வைக்கவில்லை?

எதிரிகள்- மட்டுமட்டாகத்தான் எங்களுக்குக் கட்டளை கிடைத்தது, அப்புக்காத்துவை வைக்க அவகாசம் கிடைக்கவில்லை.

நீதி- எப்போது கட்டளை வந்தது? - 14-ம் திகதி.

நீதி- இந்தமாதம் 14-ம் திகதியா? - ஆம்.

நீதி- இருவருக்கும் அப்புக்காத்து வைக்க வேண்டுமா? - ஆம்.

இரு எதிரிகளுக்கும் அரசாங்க செலவில் வழக்கறிஞர் நியமிக்கப்பட்டார்.

## பஸ்ஸுடன் மோதுண்டார்

சாவகச்சேரி, செவ்.

சாவகச்சேரியைச் சேர்ந்த விடத்தல்பளை என்னுமிடத்தைச் சேர்ந்த சி. கணபதிப்பிள்ளையின் மகன் சிதம்பரப்பிள்ளை தமது ஊரிலிருந்து சைக்கிளில்புகையிலை ஏற்றிக்கொண்டு சாவகச்சேரிக்கு வரும்போது பஸ் ஒன்றினுல் மோதப்பட்டு படுகாயங்களுடன் சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப் பட்டுள்ளார். சைக்கிளும், புகையிலையும் கோர்ட்டில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. பஸ் சாரதியை பொலிஸார் கைதுசெய்து பிணையில்விட்டுள்ளனர்.

## விற்பனைப் பகுதி அதிகாரி நேரில் விஜயம்

சங்கானை, செவ்.

விற்பனைப் பகுதி உதவி அதிகாரி திரு. என். வாமதேவன் சென்ற ஞாயிற்றுக்கிழமை சங்கானைச் சந்தைக்கு விஜயம் செய்து அங்கு விற்பனைக்கிருந்த மரக்கறி வகைகளைப் பார்வையிட்டார். அத்துடன் கமக்காரர்களின் குறைகளையும் நேரில் ஆராய்ந்து சென்றுள்ளார். கடந்த மாதம் தொடக்கம் ஆரம்பிக்கப்பட்ட ஞாயிற்றுக்கிழமை விசேஷ சந்தை தற்பொழுது விரிவடைந்துவருவதால் கமக்காரர்கள் தங்கள் பொருட்களைச் சுலபமாக விற்பனை செய்யமுடிகின்றது. இவ் விசேஷ சந்தை நாட்களில் விற்பனைப் பகுதியினர் மரக்கறி வகைகளை வாங்குவதுடன் நில்லாது மரக்கறி வகைகளையும் விற்பனைசெய்கின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org